Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ மாசி 15 ஆம் நாள் ரம்ழான் 20 (26 2-62) திங்கட்கிழமை இதழ் 16

Jegajothi TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ மதுரை

# தர்மபுரியில் தி. மு. க. அபேட்சகர் தோல்வி

## 4 முதன் மந்திரிகள் வெற்றிபெற்றனர்

### மாஸ்டர் தாராசிங் தெரிவு

### இந்திய தேர்தல் முடிவு விபரம்

புதுடில்லி, பெப். 25

இன்று அறிவிக்கப்பட்ட இந்தியத் தேர்தல் முடிவுகளில் மேற்கு வங்காளம், பீகார், அஸ்ஸாம், பஞ்சாப் ஆகிய நான்கு ராஜ்யங்களின் முதன் மந்திரிகள் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

பஞ்சாப்பில் மாஸ்டர் தாராசிங் உட்பட 3 அகாலி அபேட்சகர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். மத்திய பிரதேசத்தில் 2 சுதந்திராக்கட்சி அபேட்சகர்கள் வெற்றி பெற்றனர்.

தமிழ்நாட்டில், தர்மபுரி தொகுதியில் ஒரு சுயேச்சை அபேட்சகரும் ஹோசூர் தொகுதியில் ஒரு காங்கிரஸ் அபேட்சகரும் வெற்றி பெற்றனர்.

மைசூரில் உதவிக் கல்வி மந்திரி தோற்கடிக்கப்பட்டார்.

மேற்கு வங்காளத்தில் முதுபெரும் கிழவரான முதன் மந்திரி டாக்டர் பி. ஸி. ராய் தன்னுடன் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் அபேட்சகரை 6000 வாக்குகள் விததியாசத்தில் தோற்கடித்தார்.

அஸ்ஸாம் முதன் மந்திரி திரு. பீமபிரஸாத் சாலிஹா தன்னுடன் போட்டியிட்ட பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அபேட்சகரை 7500 அதிகப்படி வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

பீகார் முதன் மந்திரி தன்னுடன் போட்டியிட்ட சுதந்திராக் கட்சி அபேட்சகரை 7000 அதிகப்படி வாக்குகளால் தோற்கடித்தார்.

மத்திய பிரதேச நீதி மந்திரி 5000 அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்ருர். அந்த ராஜ்ய சபாநாயகரும் தெரிவு செய்யப்பட்டார்.

பஞ்சாபில் மராமத்து மந்திரி, சோஷலிஸ்ட் அபேட்சகர் ஒருவரால் தோற்கடிக்கப்பட்டார்.

#### தமிழ் நாட்டில்

தமிழ் நாட்டுத் தேர்தலில் தர்மபுரி தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் சுயேச்சை அங்கத்தினரான திரு. ஆர். எஸ். வீரப்ப செட்டியார் ராஜ்ய சட்ட சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். வாக்களிப்பு விபரம் வருமாறு:-

**திரு. ஆர். எஸ். வீரப்ப செட்டியார் (சுயேச்சை) 24191.**

திரு. எம். சுப்ரமண்யகவுண்டர் (தி. மு. க.) 18454

திரு. எம். கந்தசாமி கண்டர் (காங்கிரஸ்) 14637.

திரு. பி. ஆர். ராஜகோபால் கவுண்டர் (சுயேச்சை) . 1989.

மொத்த வாக்குகள் 1,00,000

பதிவான வாக்குகள் 59,271

செல்லுபடியாகாதவை 3,407

**ஹோசூர் தொகுதி**

**திரு. ராமச்சந்திரரெட்டி (காங்கிரஸ்) 25577.**

திரு. சாமண்ண (சுதந்திரா) 14101.

மொத்த வாக்குகள் 92141.

பதிவான வாக்குகள் 39678.

செல்லுபடியாகாதவை 2217.

தற்சமயம் இந்த ஸ்தானத்துக்கு சுயேச்சை அங்கத்தினர் இருக்கிருர்.

### பாதுகாப்பு சபை செவ்வாயன்று கூடும்

நியூயோர்க், பெப். 25

வருகிற செவ்வாய்க்கிழமை ஐ. நா. பாதுகாப்பு சபைகூடி தனது உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுகிறதென்ற கியூபாவின் புகாரை விவாதிக்கும

### இந்தோனேஷியா நம்பிக்கை

ஜாகர்த்தா, பெப். 25

மாஸ்கோவுக்கும், பிராக்கிற்கும் ஆயுதங்கள் வாங்குவது சம்பந்தமாகச் சென்றிருந்த இந்தோனேஷியவிமானப்படை அதிகாரி தமது விஜயம்பற்றி இங்கு நம்பிக்கை தெரிவித்தார்.

### பல்கேரியாவில் தேர்தல்

லண்டன், பெப். 26

பல்கேரியாவின் தேசிய சட்டசபைக்கு இன்று தேர்தல்கள் நடைபெறுகின்றன.

## அலகாபாத்தில் நேருஜி வாக்களித்தார்

### லோகசபை முடிவுகள் 27-ந் திகதி வெளியாகும்

புதுடில்லி, பெப். 25

இன்று மத்திய பிரதேச தேர்தலில் 5 முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அஸ்ஸாமில் 4 முடிவுகளும், பஞ்சாபில் 4 முடிவுகளும் அறிவிக்கப்பட்டன.

மத்திய பிரதேச 5 முடிவுகளில், 4 ல் காங்கிரஸ் வெற்றி பெற்றது. மற்ருெரு ஸ்தானம் ஜனசங்கத்துக்குப் போயிற்று. சென்ற தேர்தலில் இந்த ஸ்தானம் காங்கிரசுக்கே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்றவர்களில் ஒருவர் பஞ்சாப் சட்ட சபை சபாநாயகராகும். பஞ்சாபில் 2 முன்னைய காங்கிரஸ் ஸ்தானங்கள் அகாலி கட்சிக்குப் பறிபோயிற்று. ஒன்று ஜனசங்கமும், மற்ருென்று காங்கிரசும் கைப்பற்றின.

அஸ்ஸாம் தேர்தலில் காங்கிரசுக்கு ஒன்றும், மலை தலைவர்களின் சுயேச்சையாளர்களுக்கு 3 ம் போயிற்று.

பெரிய நகரங்களான கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களில் இன்று வாக்குப் பதிவு நடைபெற்றது. மேனன் போட்டியிடும் வடபம்பாயில் மீன் கூடைகளைத் தாங்கியவண்ணம் மீன்பிடிப் பெண்கள் வாக்களித்தனர். அலகாபாத்தில் இன்று காலை நேருஜி ராஜ்ய சட்ட சபைக்கு ஒன்றும், லோகசபைக்கு ஒன்றுமாகத் தமது வாக்குகளைப் பெட்டியில் போட்டார்.

சென்னையில் முதன் மந்திரி காமராஜரும், சுதந்திராக் கட்சித் தலைவர் ராஜாஜியும் இன்று காலை முதலில் வாக்களித்தனர். இன்று காலை தமிழ் நாட்டு சட்டசபை ஸ்தானங்களின் 109 தொகுதிகளுக்கான வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டன. சென்னை நகரில் 10 சட்ட சபை ஸ்தானங்களின் வாக்குகளும் எண்ணப்பட்டன. நகரில் தேர்தல் முடிவுகளை அறிந்து கொள்ள கூட்டம் கூட்டமாக மக்கள் திரண்டுள்ளனர்.

லோகசபைத் தேர்தல் முடிவுகள் 27 ம் தேதி அறிவிக்கப்படும்.

சென்னை நகரிலுள்ள 9,37,988 வாக்காளர்களில் 60 சத விகிதமானேர் வாக்களித்தனர். திருவல்லிக்கேணியில் 80 சத விகிதம் வாக்களிக்கப்பட்டது.

திரு. அண்ணத்துரையின் காஞ்சிபுரம் தொகுதிலல் 85 ல் இருந்து 90 சத விகிதம்வரை வாக்காளர்கள் வாக்களித்தனர்.

### துருக்கியில் தரைப்படைத் தலைவர் ராஜினமா

அங்காரா, பெப். 25

துருக்கியில் 12 கர்னல்கள் உட்பட 21 அதிகாரிகள் கட்டாய ஓய்வு பெறச் செய்யப்பட்டனர். இவர்களில் 4 பேர் காவலில் வைக்கப்பட்டனர். தரைப்படைத் தலைவர் தம் பதவியை ராஜினமா செய்துவிட்டார். அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாய்க் குற்றம் சாட்டப்பட்டது சம்பந்தமான நடவடிக்கையின் விளைவாக இவைநடைபெற்றன.

### டிட்டோ பெல்கிரேட் திரும்பினர்

பெல்கிரேட், பெப். 25

ஐக்கிய அராபியக் குடியரசிலும், சூடானிலும் சுற்றுப்பிரயாணம் செய்த பின், யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ பெல்கிரேட் திரும்பினர்.

### போர்த்துக்கலை விலக்க சிபார்சு

அடிஸ்அபாபா, பெப். 25

ஐ நா. பொருளாதாரக் கமிஷனிலிருந்து போர்த்துக்கலையும், ஸ்பெயினையும் விலக்க வேண்டுமென இங்கு கூடிய கமிஷன் சிபார்சு செய்தது.

#### பஞ்சாப்

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை பஞ்சாபில் அறிவிக்கப்பட்ட 25 ஸ்தானங்களில் காங்கிரஸ் 10 ஸ்தானங்களைப் பெற்றது.

( 8ம் பக்கம் பார்க்

## 'உலகத்தின் கவனமே மேனன் தொகுதியில்தான்'

### அவர் வென்ருல் அடுத்த பிரதமராவாராம்

லண்டன், பெப். 25

"திரு. கிருஷ்ண மேனன் போட்டியிடும் வடபம்பாய்த் தொகுதியில் தான் உலகின் கவனம் திரும்பியிருக்கிறது" என லண்டனில் சில வட்டாரங்கள் இன்று கூறின. இந்தியத் தேர்தல் பற்றிக் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு கூறப்பட்டது.

திரு. மேனன் வடபம்பாயில் வெற்றி பெற்ருல் அது பிரதமர் நேருவின் சோஷலிஸக் கொள்கைக்கு பெரும் வெற்றியாகும் என்றும், திரு. மேனனின் செல்வாக்கு இன்னும் அதிகரித்து நேருவின் அரசியல் வாரிசாக (பிரதமராக) கூட அவரை ஆக்கி விடுமென்றும் இவ்வட்டாரங்கள் கூறின. அவர் தோல்வியடைநதாலோ அதுவெளிநாட்டு, பாதுகாப்புக் கொள்கையில் நேருவின் கையை பலவீனப்படுத்தி விடும் என்றும் மேலும் கூறப்பட்டது.

# ஆசிரியர்களுக்கு சிங்களம் தேவையென்ற சுற்று நிருபம்

## தமிழாசிரியர் மகாநாட்டில் மெத்தானந்தா கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள்

"ஐம்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட அரசாங்க ஆசிரியர்களுக்குச் சிங்களம் தெரிந்தால் மாத்திரமே அவர்கள் சேவைக் காலத்தை நீடிக்க வேண்டுமென்ற கல்விப்பகுதியின் சுற்றுநிருபத்திற்குக் கைச்சாத்திட்ட மடையன் யார்? என்பது தெரியவில்லை. அரசர்ங்கத்திற்கும் ஆசிரியர்களுக்குமிடையே நம்பிக்கையீனத்தை வளர்க்கவும் ஒருமைப்பாட்டைச் சிதைத்து பிளவை உண்டுபண்ணவும் விரும்பிய உயர்தர அதிகாரியினுல் இது ஆக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல் கடவுளால் படைக்கப்பட்டபோது மூளையற்றவராகப் படைக்கப்பட்ட ஒருவரால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தச் சுற்றுநிருபம் தனிப்பட்ட ஒருவராலோ அன்றி இருவராலோ தான் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். தமிழாசிரியர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையே பிளவை ஏற்படுத்தும் இந்த அநீதியான விதியை எதிர்ப்பதற்கு சிங்கள ஆசிரிய சங்கங்களும் முன்வரும் என்பதை இங்கு உறுதிப்படுத்த விரும்புகிறேன்."

இவ்வாறு லங்கா ஜாதிக குருசங்கத் தலைவரான திரு. எல். மெத்தானந்தா சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் 15–வது வருடாந்தக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. மெத்தானந்தா மேலும் பேசியதாவது:

இந்த நாட்டிலுள்ள ஆசிரியாகளைப் பிரிப்பதற்கு பல சதித்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதற்கு கல்விப் பகுதியிலுள்ள முக்கிய அதிகாரிகளே பொறுப்பாகவுள்ளனர்.

இந்த அதிகாரிகள் அடிக்கடி பத்திரிகை மூலம் செய்திகளை வெளியிடுவதற்கு பின்னணியில் இருந்து வருகிறார்கள். குழப்பமான பல்வேறு சுற்றுநிருபங்களும் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பாடசாலைகளில் மது அருந்தினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென பத்திரிகையில் செய்தி பிரசுரமாகியிருக்கிறது. இச்செய்தி கல்விப் பகுதியைச் சேர்ந்த அதிகாரியினுல்தான் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக அந்த அதிகாரி மதுபோதையிலிருக்கும் போதே அவ்வாறு செய்திருக்கிறாரென்பதைச் சொல்லவிரும்புகிறேன்.

இப்படி அடிக்கடி பிழையான முரண்பாடான விஷயங்களை வெளியிடக் காரணமான அதிகாரிகள் இதுபற்றி பிரச்சினையை எழுப்பும்போது தாம் எதுவும் சொல்லவில்லையென மறுக்கிறார்கள்.

இப்படியான அதிகாரிகள் ஆசிரியர்களின் நல்ல சேவைகளைப்பற்றியும் அவர்களின் சிறப்புகள்பற்றியும் பேசாமல் இருப்பது ஏன்?

சமூகத்தில் ஆசிரியர்களுடைய மதிப்பைக் குறைக்கவும் ஆசிரியருக்கும் அரசினருக்கும் பிளவை ஏற்படுத்தவும் இந்த உயர்தர அதிகாரிகள் முடிச்சுப் போடுகிறார்கள். இதுபற்றி எல்லா ஆசிரியர்கள்ளும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இலங்கையே இன்று உயர்தர அதிகாரிகளின் கையில் சிக்கித் தவிக்கிறது. இதே போல் உயர்தர அதிகாரிகள் கையில் சுயபாஷை ஆசிரியர்களும் சிக்கிக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. இப்போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் இந்நாட்டின் கல்வியும் சீர்குலையும்.

## "மதம் மனித வாழ்வுக்கு அவசியம்"

—நாயர்

எட்டியாந்தோட்டை, சனி

"மதம் மனிதவாழ்வுக்கு மிக அவசியமாகும். மனிதன் ஒழுக்கத்துடனும் அன்புடனும் வாழ்வதற்கே மதங்கள் ஏற்பட்டன. இன்று மனிதன் அந்த மதத்தை தனது அக்கிரமச் செயல்களுக்கும் அநீதிகளுக்கும் உபயோகிக்கும் கீழான நிலைக்கு வந்துவிட்டான். இதை உடனடியாக உணர்ந்து மனிதன் திருந்தி உயர்ந்தால் தான் மதமும் நாடும் முன்னேறும். கோவில்கள் மக்களின் புனிதஸ்தலங்களாகும் அத்தகைய புனிதக் கோவில்கள் புதிது புதிதாக இன்று தோட்டப் பகுதிகளில் உற்பத்தியாவது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். ஆனல் கோவிலைக் கட்டிபாழடையந்து விடாமல், நல்லெண்ணத்தோடும், நற்செயல்களோடும் அங்கு சென்று உள்ளன்புடன் வழிபட்டால்தான் கோவில்கள் மதிக்கப்படும். இதைநமது தொழிலாளர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்".

இவ்வாறு உந்துகொடை எட்டதாரியாக குருப்பைச் சேர்ந்த கபுகமுவ டிவிஷனில் துரை திரு. பெரேரா தலைமையில் நடைபெற்ற முத்துமாரியம்மன் கும்பாபிஷேக விழாவில் சொற்பொழிவாற்றிய கழனிவேலி மாவட்ட இ. தொ. கா. தலைவர் கே. ஜி. எஸ். நாயர் குறிப்பிட்டார். குரூப் மனேஜர் திரு. பிரைஸ் திருமதி பிரைஸ் ஆகியோரும் விழாவுக்கு வருகை தந்திருந்தோடு திரு. பிரைஸ் விழாவில் தமிழில் பேசி மக்களை மகிழ்வித்தார். திருவாளர்கள் நாராயணசாமி கண்டக்டர், சிவராமலிங்கம், முத்தையா, டிவிஷன் கமிட்டித் தலைவர் ஏ. எஸ். குழந்தவேல், ஆசிரியர் நடராஜா முதலியோரும் விழாவில் சொற்பொழிவாற்றினர்.

## உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு மாசி மாதம் 15ந் திகதி திங்கட்கிழமை ( 26 - 2 - 62) பின்னிரவு 5-07வரை ஸப்தமி. மாலை 7-08வரை விசாகம். பின் அனுஷம். மரணயோகம். கரிநாள். புதியன எதிலும் தலைப்படாது தெய்வ வழிபாட்டால் காலம் கழிக்கவும்.

### இன்றுபிறந்தவர்களுக்கு

இன்று பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மத்திமமான பலன்களும்,முயற்சிகளில்வெற்றியும் பணநிலையில் கடன்வரவும், வண்டி வாகனங்களினல் செலவுகளும் இடையிடையே தேகநலக்குறைவுகளும் காணப்படும். கடமைகளையே ஆற்றிவரும் உத்தியோகத்தருக்கு பின் வருங்காலம் விசேடமாகும். பெண்களுக்கும் மாணவருக்கும் விசேடபலன்கள் நடைபெறும். சிலருக்கு விவாகப் பேறுகள் போன்ற சுப கருமங்களுக்கும் இடமுண்டு. தெய்வ வழிபாடு அவசியம்.

### நட்சத்திரப்பலன்

அச்சுவினி: அனுவசிய சச்சரவு, பணச்செலவு.

பரணி: தொழில்முயற்சி நன்மை, பணவரவு.

கார்த்திகை: பகைவர் கஷ்டம், பணமுடை.

ரோகிணி: கல்வி விருத்தி, வாக்குநன்மை.

மிருகசீரிடம்:பெண்தொல்லை, குடும்பக்கஷ்டம்.

திருவாதிரை: நல்லோர் உதவி, தொழில் ஊக்கம்.

புனர்பூசம்: பெண்தொல்லை, பணமுடை.

பூசம்: தொழிற் பலிதம், உழைப்புவெற்றி.

ஆயிலியம்: கடன்வரவு, சந்தோஷம்.

மகம்: பிரயாணக் கஷ்டம், கவலை.

பூரம்: குடும்பநிம்மதி, மகிழ்ச்சி.

உத்தரம்: பெண்தொல்லை, பணமுடை.

அத்தம்: தொழிற் பலிதம், மதிப்பு.

சித்திரை: வருமான முடை, கடன்படல்,

சுவாதி: தொழில் நலம், பணவரவு, மகிழ்ச்சி.

விசாகம்: யோசனை அதிகம், கடன்படல்.

அனுஷம்: பெரியோர் உதவி, மதிப்பு வளர்ச்சி.

கேட்டை: ஆடம்பரச்செலவு, மகிழ்ச்சி.

மூலம்: இழிந்தோர் சந்திப்பு, கவலையாரம்பம்.

பூராடம்: சந்தோஷ கொண்டாட்டம். நன்மைப்பேறு.

உத்தராடம்: பிதாவழிஉதவி தெய்வவழிபாடு.

திருவோணம்:வாக்குவெற்றி, பணவரவு.

அவிட்டம்: குடும்ப கஷ்டம், பணமுடை.

சதயம்: நற்செய்தி, நிம்மதி.

பூரட்டாதி: இனசனக் கஷ்டம், பணமுடை.

உத்தரட்டாதி: பிதாவழி உதவி, குடும்பநன்மை.

ரேவதி: குடும்பநன்மை, மகிழ்ச்சி.

# இலங்கைத் தமிழரைவிட இந்தியதமிழர்இங்குஅதிகமாம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கையில் இலங்கைத் தமிழர்களைவிட இந்தியத் தமிழர்கள் அதிகம் என லண்டனிலுள்ள காமன்வெல்த் நட்புறவு காரியாலயம் வெளியிட்டுள்ள காரியாலய பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1962-ம் ஆண்டுக்கான இந்தப் பட்டியலில் இலங்கை பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது இலங்கையில் 1 கோடி இந்தியத் தமிழர் உள்ளனர். இவர்கள் இலங்கையின் சனத்தொகையில் 12 சத வீதமானவர்கள். இலங்கைத் தமிழர் 11 சத வீதமானவர்கள்.

இலங்கைத் தமிழர் தென் இந்தியாவிலிருந்து இலங்கை வந்து நாட்டைக் கைப்பற்றியவர்களின் சந்ததிகள் இந்தியத் தமிழர் சமீபத்தில் இலங்கைவந்து குடியேறியவர்கள்.

இலங்கையின் சனத்தொகையில் 69.3 சத வீதத்தினர் சிங்களவர். சோனகர் 5.7 சத வீதத்தினர். மற்ற இனத்தவர்கள் 2.0 சத வீதத்தினர்.


## குறைந்த செலவில் நிறைந்த சேவை அரியசந்தர்ப்பம்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விரைவாகவும், பாதுகாப்பாகவும் லொறிகள் மூலம் சாமான்கள் அனுப்பி வைக்கவிரும்புவோர் சங்கானை கூட்டுறவு சமாசத்தின் காரியதரிசியுடன் நேரடியாகவோ கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும்.

மேற்படி சமாசத்தில் விற்பனைக்கு இருக்கும் 'செவலெட்' லொறி C. V. 4401 வாங்க விரும்புவோர் 15-3-62க்குமுன்னதாக தொடர்புகொள்ளும்படிவேண்டப்படுகின்றனர்.

காரியதரிசி.

## தேவை

தனிப்பட்ட ஒருவரின் காருக்கு அனுபவம் வாய்ந்த கார் சாரதி ஒருவர் தேவை. தகுதிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்தேவையானசம்பளம் பற்றியும் தெரிவிக்கவும். c/o ஈழநாடு 10,


## மரண அறிவித்தல்

புங்குடுதீவு உடையாராகவும், தீவுப்பகுதி மணியகாரனுகவும் கடமையாற்றி இளைப்பாறியவரும், திரு ஏ. எஸ். இராசேந்திரம் (இளைப்பாறிய கிராமாதிகாரி) திரு. ஏ. எஸ். நடராசா (சட்டக்கல்லூரிமாணவன்) அவர்களது அருமைத் தந்தையும் காலஞ்சென்ற திரு. க. அம்பலவாணர் (கே. ஏ. வாணர் அன் கொம்பனி) வேலணை மத்திய கல்லூரி ஆசிரியர் திரு. ஏ. டி. தம்பையா, திரு வி. கே. முத்துலிங்கம் அவர்களதும், மாமனுருமாகிய திருவாளர் ஏ- சரவணமுத்து சமாதான நீதிபதி அவர்கள் இயற்கையெய்தி விட்டார்கள். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று ( 26-12-62 ) முற்பகல் பத்துமணிக்கு நடைபெறும்.

ஏ. எஸ். நடராசா, புங்குடுதீவு.

# ஆசிரியர்சங்கத்தின் முக்கிய பதவிகள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு

## திரு. செல்லத்துரை மீண்டும் தலைவர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் முக்கிய பதவிகளுக்குப் பலத்த போட்டிகள் ஏற்பட்டிருந்ததை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்தலில் முதன்முதலாக இரகசிய வாக்குமூலம் நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

திரு. கு. வி. செல்லத்துரை 62 வாக்குகளைப் பெற்று மீண்டும் இச்சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருடன் போட்டியிட்ட திரு. த. ச. சண்முகதாசனுக்கு 54 வாக்குகள் கிடைத்தன.

திரு. டொ. சை. க. வனசிங்கா வாபஸ் பெற்றுக் கொண்டதனல் திரு. ம. சிவநேசராசா பொதுக் காரியதரியாக மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். திரு. வனசிங்கா உதவிக்காரியதரிசியாக தெரிவு செய்யப்பட்டார். திருவாளர்கள் இ. கந்தையா, த. ச. சண்முகதாசன், க. இ. குமாரசாமி ஆகியோர் உபதலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தனதிகாரியாக திரு. வ. நடராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பரீட்சைக் காரியதரிசி, ஆசிரியன் நிர்வாகி, தோட்டப் பாடசாலை காரியதரிசி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் கீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரு. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்



பெல்ஜியன்

# முள்ளுக் கம்பி

$12\frac{1}{2}$ & 14 அளவு

ஒவ்வொரு கன அங்குலத்துக்கும் 45 தொன் வித அளவுக்கு இதை முள்ளுக்கம்பி நீட்டி இழுக்கக் கூடியது.

லாபமான விலைக்குக் கிடைக்கும் எமது முள்ளுக்கம்பி சகல விதமான வேலியடைப்புக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

கூ. மொ. வி. தாபனம் கடினப்பொருள் இலாகா

40, மக்கலம் வீதி, கொழும்பு-10.

கூ. மொ. வி. தாபனத்துசில்லறைக் கடைகள் எல்லாவற்றிலும் கிடைக்கும். CAS/HW/322

# அல்ஜீரியாவில் நேற்றுமட்டும் 40 பேர் கொல்லப்பட்டனர்

## கண்ணில்பட்ட முஸ்லீம்களை ஐரோப்பியர் சுட்டனர்

பாரிஸ், பெப். 25

அல்ஜீரியாவில் ஐரோப்பியர்களுக்கும் அல்ஜீரிய முஸ்லிம்களுக்குமிடையில நேற்று நடைபெற்ற கைகலப்பில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இருபதுக்கு மேற்பட்டவர் காயடைந்தனர்.

ஒரு வாடகைக் கார் சாரதியான ஐரோப்பியர் ஒருவர் தனது காரை வீதியோரத்தில் நிறுத்திவிட்டு இறங்கிய பொழுது அவர் மீது ஒரு முஸ்லிம் சுட்டதாகவும் இதைத் தொடர்ந்தே அங்கு பெரும் கலகம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இச் சம்பவத்தின் பின்னர் ஐரோப்பியர்கள் தங்கள் கண்ணில் பட்ட முஸ்லிம்களைச் சுடத்தொடங்கிவிட்டனர். ஐந்து முஸ்லிம்கள் ஸ்தலத்திலேயே மாண்டனர்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இப்பகுதியில் இப்பொழுது ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் சடலங்கள் இரத்த வெள்ளத்தில் கிடக்கக் காணப்பட்டனர்.

ஐரோப்பியர்களுக்கும் அல்ஜீரிய முஸ்லிம்களுக்குமிடையில் சுமார் நான்குமணி நேரமாக துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

கலகம் நடைபெற்ற பகுதிகளுக்கு பாதுகாப்பு படையினர் விரைந்து சென்று முற்றுகையிட்டனர்.

ஐரோப்பிய தீவிரவாதிகளின் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களென்று சந்தேகிக்கப்பட்டவர்களின் வீடுகள் சில சோதனையிடப்பட்டு ஆயுதங்கள் பல கைப் பற்றப்பட்டன.

---

### தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்

சென்னை, பெப். 22

"சென்னை தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்" என்ற ஒரு எழுத்தாளர் கூட்டுறவு முயற்சி கடந்த சில மாதங்களுக்கு முன்பு சென்னையில் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. சுமார் 100 அங்கத்தவர்கள் கொண்ட இந்த ஸ்தாபனத்தில் 5 ரூபா பங்குப்பணமாக 50 ஆயிரம் ரூபாய் மூலதனம் சேர்க்க ஏற்பாடாகியிருக்கிறது. சட்டப்படி கூட்டுறவு ரிஜிஸ்டிரார் பதிவுபெற்றுள்ள இச்சங்கம் முதல் ஆண்டில் 12 நல்ல புத்தகங்களை வெளியிடத் தீர்மானித்திருக்கிறது. தமிழ் நாட்டில் முதன் முதலாக ஏற்பட்ட எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் இதுவே.

---

லாவோஸ்

### பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை

வியன்டைன், பெப். 25

லாவோசில் தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக வலதுசாரியினருக்கும் நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமாவுக்குமிடையில் நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்பு, உள்விவகார இலாகாக்களை தங்களிடம் தரவேண்டுமென்று வலதுசாரிப் பிரதமர் இளவரசர் பூன் ஊமும் உதவிப் பிரதமர் ஜெனரல் பூமி நொசாவானும் வற்புறுத்திவருவதுதான் பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் எனத் தெரிகிறது.

---

### ஷோம்பே அறிவிப்பு

எலிஸபெத்வில்லி, பெப். 24

தமக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் லியப்பேல் ல்வில் சென்று பிரதமர் அடூலாவைச் சந்திக்கத் தயாராய் இருப்பதாக திரு. ஷோம்பே தெரிவித்துள்ளார்.

---

### கியூபா புகார்

#### பதுகாப்புச்சபை ஆராயும்

நியுயோர்க், பெப். 25

கியூபாவின் உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுகிறதென்றும் கியூபா மீது பல வந்த நடவடிக்கையெடுக்க அமெரிக்கா முயற்சி செய்கிறதென்றும் பாதுகாப்புச் சபைக்கு கியூபா செய்துள்ள புகார் பற்றி ஆராய்வதற்காக பாதுகாப்புச் சபை செவ்வாய்க்கிழமை கூட விருக்கிறது.

கியூபாவுக்கு எதிராகபொருளாதாரத் தடை நடவடிக்கைகள் எடுப்பதற்கு சமீபத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தை அமெரிக்கா அமுல் நடத்தாமல் தடை செய்யும்படியும் கியூபா பாதுகாப்புச் சபையைக் கோரியுள்ளது.

---

## நேருவின் தேர்தல் சுற்றுப்பிரயாணம்

### 31 தினங்களில் 18,000மைல்கள் சென்று 90கூட்டங்களில் பேசினர்

புதுடில்லி, பெப்.25

இந்திய தேர்தல் பிரசாரத்தில் பிரதம மந்திரி நேரு 31 தினங்களில் விமானத்தில் 16,362 மைல்களும், 1,300 மைல்கள் சாலைகளிலும், ரயிலில் 130 மைல்களும் பிரயாணம் செய்திருக்கிறார்.

73 விமானப் பிரயாணத்தில் மொத்தம் 98 மணி நேரம் நான்கு விதமான விமானங்களில் நேருபிரயாணம் செய்திருக்கிறார்.

இந்தச் சுற்றுப்பிரயாணத்தின்போது 14 ராஜ்யங்களில் 88 பட்டினங்களுக்கு பிரதமர் விஜயம்செய்துள்ளார். 72 வயதான பிரதமர் நேரு சுமார் 90 பொதுக்கூட்டங்களில் மொத்தம் 76 மணி நேரம் பேசியிருக்கிறார். பொதுக்கூட்டங்கள் தவிர சிலசமயங்களில் வீதிகளில் கூடிநின்ற மக்கள் மத்தியிலும் சுருக்கமாகப் பேசியிருக்கிறார். இப்படி 60 சந்தர்ப்பங்களில் அவர் காரிலிருந்து இறங்கிபேசியிருக்கிறார்.

---

### கிறிஸ்தவ பாடசாலைகள்

கராச்சி, பெப். 24

கிறிஸ்தவ பாதிரிமார்களால் நடத்தப்படும் சகல பாடசாலைகளிலும் முஸ்லிம் மாணவர்களுக்கு மதக் கல்வி அளிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் மாணவர்களுக்கு மதக் கல்வி போதிப்பதற்காக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு அரசாங்கம் மானியம் வழங்கும்.

---

### மேற்கு ஜெர்மன் வரவேற்பு

பொன், பெப். 24

மேற்கு ஜெர்மனியுடன் ரஷ்ய உறவை உடனடியாக ஏற்படுத்திக்கொள்ள முடியாவிட்டால் படிப்படியாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற சோவியத் யோசனையை மேற்கு ஜெர்மன் அரசாங்கம் வரவேற்றுள்ளது.

---

### அங்கத்தவர் ராஜினமா

பளை, சனி

முள்ளிப்பற்றுக் கிராமச்சங்கத்தின் ஆரும் வட்டார அங்கத்தவரான தாவீதுப்பிள்ளை அருளானந்தம் தமது அங்கத்தவர் பதவியை மார்ச் 1-ம்தேதி ராஜினமாச் செய்வதாக முள்ளிப்பற்று கிராமசபைக்கு அறிவித்தார். இவர் ஆசிரியராகக் கடமையாற்றி வந்த பாடசாலையை அரசாங்கம் பெறுப்பேற்றதே இவரின் ராஜினமாவிற்கு காரணமாகும்.

---

### புதிய அங்கத்தவர்

பளை, சனி

முள்ளிப்பற்றுக் கிராமச்சங்கத்தின் எட்டாம் வட்டார அங்கத்தவரான சின்னத்தம்பி நாகரத்தினம் தமது அகத்தவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டதால் அவரின் இடத்திற்கு சின்னையா துரைசிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

---

## யாழ்ப்பாணத்துக்குவருமாறு நேருவுக்கு அழைப்பு

மயிலிட்டி, ஞாயிறு

'தாங்கள் சமீபத்தில் இலங்கை வர எண்ணியிருப்பது குறித்து மயிலிட்டி மக்களும் பியிலிட்டி கிராமசபையினரும் மகிழ்வடைவதோடு தங்களை முழுமனதோடு வரவேற்கக் காத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கின்றோம்' இவ்வாறு மயிலிட்டி கிராமசபையினர் பாரதப் பிரதமர் திரு. நேருவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்கள்.

மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரன் கையொப்பமிட்டு திரு. நேருவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

தாங்கள் 1931-ம் வருடம் தங்களது மனைவியுடனும் மகளுடனும் வட இலங்கைக்கு விஜயம் செய்ததை இங்குள்ள மக்கள் நினைவில் வைத்துள்ளார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்த தங்களது வருகை அப்பொழுது சுதந்திரத்துக்காகப் போராடிக்கொண்டிருந்த இலங்கை மக்களுக்கு புது உற்சாகத்தைக் கொடுத்தது

நீங்கள் இலங்கையை விட்டு பாரதத்துக்குத் திரும்பிச் செல்லும் போது, ஏகாதிபத்தியத்துக்கெதிராக நடத்தப்படும் போராட்டத்தில் தலைமை தாங்குவதற்கு ஏற்றவர் ஒரு யாழ்ப்பாணத் தமிழரே எனக் குறிப்பிட்டிருந்ததை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருப்பீர்களென நாம் நம்புகின்றோம். தாங்கள் அதற்குப் பின்னர் இலங்கைக்குப் பலதடவை வந்திருந்தும் இங்கு வராது சென்றது குறித்து நாம் வருத்தமடைகின்றோம். இம்முறை இலங்கைக்கு விஜயம்செய்யும் போது தாங்கள் இங்கு விஜயம் செய்து எம்மை மகிழ்விப்பீர்களென நாம் திண்ணமாக நம்புகின்றோம்.

---

### பஜனை பூர்த்திவிழா

தெல்லிப்பழை, ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அணித்தாகவுள்ள சைவ இளைஞர்கள் கடந்த 41 தினங்களாக அட்டகிரக சேர்க்கையிலிருந்து நிவாரணம் பெறுமுகமாக நடத்திவந்த அதிகாலை கோளறு பதிகப் பஜனைப் பூர்த்தி விழா நேற்று மாலை நடைபெற்றது. நேற்றுக் காலை முருகப் பெருமானுக்கு சந்தனபிஷேகம், விசேஷ ஆராதனைகள் நிகழ்ந்தன. மாலையில் பஜனை கோஷ்டியினர் வீதிவலம் வருகையில் இல்லங்கள் முன்பாகப் பூரண கும்பங்கள் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது. பிரம்மாலய முன்றலில் வேதாகம பூஷணம் பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் பஜனை கோஷ்டியினருக்குச் சில நூல்களை அன்பளிப்பாக வழங்கினர்.

மாவிட்டபுரம் கிராமத் தலைமைக்காரரும் பஜனை கோஷ்டியினரின் தொண்டுகளைப் பாராட்டி, நூல் அன்பளிப்பு வழங்கினர்.

---

### ரயில்-பஸ் மோதல்

வவனியா, சனி

வவனியாவிலிருந்து பாவற்குளம் என்ற இடத்துக்குச் சென்றுகொண்டிருந்த பஸ் (இ.போ.ச. பஸ்அல்ல)ஒன்று, வவனியா—மன்னர் வீதியிலுள்ள,புகையிரதக்கடவையில், 'யாழ்தேவியுடன்' மோதுண்டு விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் எவரும் பலத்த காயமடையவில்லை. இவ்விபத்து காரணமாக, 'யாழ்தேவி, சுமார் ஒருமணி நேரம் தாமதித்துப் புறப்பட்டது.

---

## 'இடைவெளியைக் குறைக்க மக்கள் முயலவேண்டும்'

—பார்லிமெண்டரி காரியதரிசி

தோம்பே, ஞாயிறு

'அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையேயுள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு மக்கள் முயற்சிசெய்யவேண்டும். இந்த இடைவெளியே சதித்திட்டத்தை வகுப்பதற்கு வசதிசெய்து கொடுத்தது, என தொழில் தேசியமய சேவை மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு யு. பி. வீரசேகரா (தாம் பேயிலுள்ள தெக்கதன தொகுதியில் தேசிய சேவைத் திட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

திரு. வீரசேகரா தொடர்ந்து பேசியதாவது.

எந்த அரசாங்கம் பதவியிலிருக்கிறதோ அந்த அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பது மக்களின் கடமை.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நாட்டில் இருந்துவந்த சட்ட அமைப்புக்கள் சீர்திருத்தப் படவேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. இவ்வருடம் ஜனவரி 27-ம் திகதி சதித்திட்டம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இவ்வித திருத்தம் தேவை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. எனவே தற்காலிகமாக மரணதண்டனை வழங்கும் சட்டத்தில் விசேஷ ஷரத்துக்கள்கொண்ட மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

சட்டதிட்டங்களில் இன்னும் சில மாற்றங்கள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

---

### உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

அராலி தெற்குக் கிழக்குக் கிராம முன்னேற்றச் சங்கம், அராலி தெற்குக் கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அராலி சரஸ்வதி சனசமூக நிலையம் ஆகியவற்றின் செயலாளராகக் கடமையாற்றும் திரு. ச. நடராசாவை சுகாதார அமைச்சு வட்டுக்கோட்டை ஆஸ்பத்திரியின் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக நியமித்துள்ளது.

---

### கிளனுக்கு கென்னடி வரவேற்பு

கேப்கனவரோல், பெப். 24

அமெரிக்க வனவெளி வீரர் ஜோன் கிளன் பஹாமாவிலிருந்து கேப்கனவரோலுக்குத் திரும்பினர். ஜனதிபதி கென்னடி விசேஷமாக அங்குசென்று கிளனை வரவேற்று, அவருக்கு கௌரவச் சின்னத்தைச் சூட்டினர்.

---

## பொதுப்படை திரட்ட சுகர்னே உத்தரவு

ஜாகர்த்தா, பெப். 25

இந்தோனேஷியா முழுவதிலும் பொதுப்படை திரட்டப்படுவதற்கு இந்தோனேஷிய ஜனதிபதி டாக்டர் சுகர்னே நேற்று உத்தரவிட்டார் 18வயதுக்கும் 40 வயதுக்குமிடைப்பட்டவர்களுக்கு ராணுவப்பயிற்சியும், சிவில் பாதுகாப்புப் பயிற்சியும் அளிக்கும்படி இந்த உத்தரவு கூறுகிறது.

மேற்கு இரியானை விடுதலை செய்வதற்கு பொதுப்படை திரட்டப்படுமென்று சென்ற டிசம்பர் மாதம் 18-ந் திகதி வெளியிட்ட ஒரு பிரகடனத்தில் டாக்டர் சுகர்னே தெரிவித்திருந்தார். அதன் பின் ஐந்துலட்சம் இளைஞர்கள் தொண்டர்படையில் தொண்டர்களாகச் சேர்ந்தனர். இவர்களுக்கு ஏற்கெனவே பயிற்சியளிக்கப்பட்டுவருகிறது.

பொதுப்படை திரட்டுவதற்கு ஜனதிபதிசுகர்னே நேற்று விடுத்த உத்தரவு மேற்கு இரியான் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாண்பதைப் பாதிக்கும் என்று டச்சு அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

**மணி வாக்கு**

எல்லாச் செல்வங்களும் இறைவனுக்கே உரியன. நாமும் அவனுடைய சொத்துஎன நினையுங்கள்.


ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
மாசி மீ 13 உ ( 24- 2 - 62)


## ஆசிரியர் சேவை

"சமுதாயத்தில் தமக்குள்ள அதிமுக்கிய ஸ்தானத்தை உணர்ந்து,ஆசிரியர்கள் பொது வாழ்வில் நல்ல சேவையைச் செய்யவேண்டியது அவசியம்" என்று, அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் 15-வது வருடாந்த மகாநாட்டைத் திறந்துவைத்துப் பேசுகையில், யாழ்ப்பாண மேயர் திரு. எம். ஜேக்கப் சரியாக அறிவுறுத்தியுள்ளார். மேயர் அவர்களே 42வருடகாலம் ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டிருந்த பழுத்த பழம். அவரது யோசனைகள் ஆசிரியர்களுக்கு நல்லவழிகாட்டப் பயன்படுமென்றே நம்புகிறோம்.

பள்ளிக்கூடங்கள் அரசாங்க நிர்வாகத்துக்கு மாறியபின், ஆசிரியர்களில்பலரும் பொது வாழ்வில் ஈடுபடத் தயங்குகிறார்கள். தேர்தல்முதலியநேரடி அரசியல் விஷயங்கள் ஒருபுறமிருக்க, சமுகசீர்திருத்தசேவைகளில் கூட ஈடுபடமுன்போல் தாராளமாக பலரும் முன்வருவதில்லை. தாங்கள் அரசாங்க ஊழியர்களாகிவிட்டதால் பொது விஷயங்களில் ஈடுபடுவதும் கூடாதோ என்ற சந்தேகமும் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பது இயற்கை. இதனால் பொது மக்களுக்குத்தான் பெரிய நஷ்டம். ஆகவே அரசாங்கம் முன்வந்து, இவ்விஷயமானசந்தேகங்களை, நீக்கிஆசிரியர்கள்சமூகசேவைகளில் உற்சாகத்துடன்ஈடுபடஊக்கமளிக்கவேண்டியது அவசியமாகும்.

ஆசிரியர்களுக்குப் பலபல குறைகளுண்டு தான். இடமாற்றம், நியமனம், பதவி உயர்வு முதலியவற்றை, ஆசிரியர் சேவைக்கமிஷன் அமைத்து, அதன்மூலம் தீர்மானிக்கவேண்டுமென்று ஆசிரியர்சங்கம் கேட்டிருக்கின்றது. பிரிட்டனில் "கவுண்டிகவுன்ஸில்" என்றபிரதேசசபையின் அதிகாரத்தில் கல்விசேவை இருப்பதுபோல் இலங்கையிலும்இருக்கவேண்டுமென்று பேராசிரியர்நேசையா அவர்கள் கூறியிருக்கிறார்கள். அகில இந்திய அடிப்படையிலே மொழி, சமயம் முதலிய வேற்றுமைகளின்றி ஆசிரியர்கள் ஒரு ஸ்தாபனத்தின் கீழ் கட்டுப்பாடாகச் சேர்ந்துள்ளது ஒரு நற்சகுனம். அந்த ஸ்தாபனத்தின் வாயிலாக, அவர்கள் தங்கள்பலகுறைகளையும் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்புண்டு.

மேயர் ஜேக்கப் கூறியதுபோல் 'ஆசிரியர் தொழில்' கடவுளால் அழைக்கப்பட்டு அவனால் கொடுக்கப்பட்ட சிறந்த மகத்துவம் வாய்ந்த ஒரு பணியாகும்.' இவ்வித உணர்ச்சியுடன் இத் தெய்வீகப் பணியைச் செய்யும் ஆசிரியர்கள் தங்கள் கடமையில் இன்பம் காண்பதுடன் நல்ல பலனும் பெறுவார்கள். கடமைகளைச் சர்வரச் செய்தால், உரிமைகள் தானகக் கிடைக்கும் என்றார் காந்தியடிகள். எதிர்காலப் பிரஜைகளான மாணவர்களை ஒழுக்க சீலர்களாக்கவேண்டியது ஆசிரியர்களின் பெரும் பொறுப்பு ஒழுக்கநெறிநின்று, கடமையற மாணவர்களையும் தங்களைப்போலவே நல்ல சீலமுள்ளவர்களாகவும், அறிவாளிகளாகவும் ஆக்கும் ஆசிரியர்கள் பொதுமக்களின் அமோகமான மதிப்பையும், ஆதரவையும் பெறுவரென்பது திண்ணம்.

# தமிழ் இசையின் மறுமலர்ச்சி இசைவிழாவில் அறிஞர்கள் உரை

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை இசை ஆசிரியர் சங்க ஆதரவில் வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடைபெற்ற ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் உற்சவ இசை விழாவின் இரண்டாவது நாள் காலை நிகழ்ச்சிகள் வித்தியாதரிசி திரு. வி. தருமசங்கரி தலைமையில் நடைபெற்றது. திரு. தர்மசங்கரி ஆற்றிய தலைமையுரையின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது:-

இசையினது பெருமையை உணர்ந்தே இசைத்தமிழை நடுநாயகமாக வைத்துள்ளனர். இன்தமிழ், பைந்தமிழை, செந்தமிழ், தெய்வத் தமிழ் எனத் தமிழ்புகழ்ந்துரைக்கப்படுதற்கு இசைத் தமிழே காரணமானது இசைத்தமிழ் என்பதன் பொருள் இசைவிப்பது: அதாவது ஆன்மாவை இறைவனோடு இசைவிப்பது, செவிவாயிலாகக் கேட்பாரது உள்ளங்களை இசைவிப்பது எனப் பொருள்படும். ஆயனாயானர் புல்லாங்குழலிசை கேட்டதும் புல் மேய்ந்த பசுக்கூட்டங்கள் அவரை வந்து சூழ்ந்து விடும். இலங்கை மன்னனை இராவணனே இசையினல் புகழ்கொண்டு வீணைக்கொடியோன் எனப் பெயர் பெற்றான். அகத்திய மாமுனிவரோடு இராவணன் போட்டியிட்டு வீணை வாசித்த போது மரம், செடி, புல்பூண்டு ஆகிய எல்லாம் உருகின. மீண்டு அகஸ்தியர் வீணை வாசித்த போது கருங்கல் மலையே உருகி இராவணன் வைத்துவிட்டு இசையில் மயங்கியிருக்கும்போது அவனது யாழை அகப்படுத்திக்கொண்டதென அறியக்கிடக்கின்றது.

### 'ஏழிசையாய்....'

கண்ணனே புல்லாங்குழலைத் தாங்கினர். கலைமகள் வீணையைத் தாங்கினர். வேதங்களில் சாமவேதம் சங்கீதமே. இறைவனே "ஏழிசையாய் இசைப் பயனாய்" என வழுத்தப்படுகின்றார் - ஏங்கியழும் குழந்தை தாயின் தாலாட்டில் மெய்மறந்து தூங்கும் - பாம்பும் குழலிசை கேட்டு அடங்கும் - மதயானையை யாழிசையால் அடக்கலாம் - அது மட்டுமா? சமயக்குரவர் நால்வரும் இறைவனையே இசைபாடிக் கண்ணரைக் கண்டு கலந்தனர்.

ஆன்மாவைத் தேவ அம்சமாக்குவது இசை. இசை நயந்து பாடுபவரில் சிவம் பிரகாசிக்கும். மேலும் இசைபாடுவார் வசமாகக் கேட்டுணர்வார் ஒத்திசை உணர்வு வசமாகிப் பரவசமாகக் காண்கிறோம். தமிழிசை இன்று நேற்று தயமானதல்ல.முதலிடைகடைச் சங்கம் நிகழ்ந்த நாட்களிலேயே ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர்ச் சிறந்திருந்தது. பண்டைத் தமிழிசைப் பெருமையை விளக்க இன்று சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை ஒன்றே போதியது. விபுலானந்த அடிகளார் 'யாழ் நூல்' செய்தற்கு ஆதாரமாக இச் சிலப்பதிகாரமே இருந்தமை குறிப்பிட்டுள்ளார். பெருநாரைப் பெருகு என்பன முதலாக அனேக இசை நூல்கள் இருந்தன அவையெல்லாப் கடல் கோள்களினல் தமிழ்நாடு அழியவே அவையும் அழிந்தன. இடைக்காலத்திலேதான் ஆரியர் கலப்பினல் இசைத்தமிழ் சமஸ்கிருத, கன்னட, தெலுங்கு மொழிகளின் சேர்க்கையினல் திரிபடைந்தன. அதனல் மிதழிசை கர்நாடக சங்கீதமெனவும் ஆரிய சங்கீதம் கர்நாடக ஹிந்துஸ்தானி சங்கீதமெனவும் இருவகையாகப் பிரிந்து வளர்ந்தன.

### மும்மூர்த்திகள்

அந்நியராச்சிக் காலத்து வீழ்ச்சியடைந்த தமிழிசை மீண்டும் இருபதாம் நூற்றுண்டில் மறுமலர்ச்சியடைவதாயிற்று. ஆயினும் சங்கீத மும்மூர்த்திகளாகிய தியாகராச சுவாமிகள், முத்துச்சாமிதீக்ஷிதர் சியாமா சாஸ்திரிகள் ஆகியோரால் இயற்றப்பட்ட 'கிருதிகள்'எந்த நாட்டிலும் எந்தக்காலத்திலும் கேட்பவரது உள்ளத்தையும் ஆன்மாவையும் உருக்கும் பெருமையுடையனவாக விளங்குகின்றன. தியாகராசசுவாமிகள் சங்கீதத்தினலே கடவுளைக் கண்டு இசை மீட்டிச் சுருதியோடு கலந்து சமாதி நிலையடைந்தார்.

தமிழிசை மறுமலர்ச்சிக்காக உழைத்தோரில் ராஜா சேர் அண்ணமலைச் செட்டியார் முதன்மையானவர். அவரது அநுசரணையினல் வித்துவான் ந. பொன்னையாபிள்ளை தமிழிசை வர்ணங்களை அமைத்ததுடன் வீணை விற்பன்னராகவும் விளங்கினர். அவர்களின் பரம்பரையில் திரு. பாவனந்தம்பிள்ளை முதலாக அண்ணமலைப் பல்கலைக்கழகம் இசையை வளர்த்து வருகிறது. யாழ்ப்பாணம் கடந்த 20 வருடகாலமாக இசை வளர்ச்சியில் வருவது மகிழ்ச்சிக்குரியது."

இப்பஜனையில் சங்கீத வித்துவான்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# இசைக்கு தனியாக ஒரு சர்வகலாசாலை

## அவசியம் என்கிறார் உதவி வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

"சங்கீதக் கலையை அபிவிருத்தி செய்துவருவதில் இன்று ஈழநாட்டிலுள்ளவர் யாவரும் தக்க கவனம்செலுத்தி வருகின்றனர். இசைச் சர்வகலாசாலை மிக அவசியம் என்பதை நாம் அறியக்கூடியதாயிருக்கின்றது. அண்ணமலை சர்வகலாசாலை போன்று நமது நாட்டிலேயும் நிறுவ வேண்டிய முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் இரண்டொரு ஆண்டுகளில் அவ்வெண்ணம் நிறைவேறுவதற்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன"

இவ்வாறு வடமாகாண உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் அகில இலங்கை இசையாசிரியர் சங்க தியாகராசர் உற்சவ இசை விழாவின் முதல்நாள் விழாவிற்குத் தலைமைவகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது நாட்டிலுள்ள இசைக் கலைஞர்களை நாமே முதலில் மதிக்கப்பழகவும் வேண்டும். அப்பொழுதுதான் பிறர் நமது கலைகளுககு மதிப்புக்கொடுக்கக்கூடியதாகவிருக்கும் என்றார்.

இன்றைய விழாவில் திரு. எஸ். வைத்தீஸ்வர ஐயர், திழி ஆ. நமசிவாயம், எஸ். வர்ணகுலசிங்கம், திரு. பி. இளையதம்பி, திருமதி. சரஸ்வதி பாக்கியராசா, திரு. த. இராசலிங்கம் ஆகியோர் இசைவிருந்தளித்தனர்.

எஸ். சோமாஸ்கந்தசர்மா' திரு. க. சித்திவிநாயகம், வி. கே. குமாரசாமி,எஸ். ஈ. குமாரசாமி, திரு வி. அம்பலவாணர் திரு. ஏ எஸ். இராமநாதன், செல்வன் த. ஜெயசுந்தரம் ஆகியோர் பக்கவாத்தியம் வாசித்தனர்.

திரு. அப்புலிங்கம் கோஷ்டியாரின் நாதஸ்வரக்கச்சேரியும் அங்கு நடைபெற்றது

## மட்டக்களப்பு நகர சபையின் உபதலைவர்

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பு, நகரசபையின் இவ்வாண்டு உபதலைவரக முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. ஜே. என். ஹென்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 24 வயது இளைஞரான இவர் ஒரு வர்த்தகராவார்.

## மறைந்த தலைவருக்கு அஞ்சலி

வேலணை, ஞாயிறு

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோவில் மகாசபைக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. மேற்படி கோவில் பரிபாலன சபையின் தலைவர் திரு. சே. கந்தையாவின் மறைவையொட்டி அன்னரது ஆன்மசாந்திக்காக விஷேச பூசை நடைபெற்றது. ஆலயத்தின் பரிபாலன சபை அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சே. நா. சரவணமுத்து, செயலாளர்: ஆ. வி. நாகலிங்கம், பொருளாளர்: க. சண்முகலிங்கம், ச. மகாலிங்கம் (கிராம விதானையார்). மு. குமாரசாமிப்பிள்ளை, ப அரசகேசரி ஆகியோர் பரிபாலன சபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

முன்னாள் தலைவர் திரு. சே. கந்தையாவின் சேவையைப் பாராட்டி பலரும் பேசினர்.

## வேலணைக்கு வெற்றி

வேலணை, ஞாயிறு

வேலணை அரசினர் மத்திய கல்லூரிக் கோஷ்டிக்கும் ஊர்காவற்றுறை சென். யோசேப் விளையாட்டுக் கழகக்கோஷ்டிக்குமிடையே கல்லூரி முன்றவில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் வேலணை மத்திய கல்லூரிக் கோஷ்டி இரு ஆட்டங்களிலும் வெற்றியீட்டியது.

## ஒன்றரை லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும்

கொழும்பு, ஞாயிறு

ஒரு லட்சத்து 50,000 மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் காணி விவசாய மந்திரி திரு. சி. பி. டி' சில்வாவின் திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

இத்திட்டத்தின்படி 250,000 ஏக்கர் முடிக்குரிய காணி அபிவிருத்திக்காக மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். நிர்மாண வேலைக்கும் விவசாய திட்டங்களுக்கும் தொண்டர்படை திரட்டப்படும்.

## ஐயாறன் எழுதுவது

சென்ற வியாழக் கிழமை காலையில் இரு அன்பர்கள் கலைப்புலவரிடம் சென்றனராம். சமீபத்தில் காலஞ்சென்ற நீராவியடி பெரியார் செல்லப்பா, பகவத்கீதையில் பலபாடல்களை தமிழாக்கம் செய்திருப்பதாயும், அவரது அந்தியேஷ்டியில் அவற்றைப் பிரசுரிக்க இருப்பதாயும், அதற்கு ஒரு முன்னுரை எழுதித் தரவேண்டுமென்றும் கலைப்புலவரைக் கேட்டதற்கு, அவர் உடன் 'ஓம்' என்று ஒப்புக்கொண்டு, திங்கட்கிழமையன்று வருமாறு கேட்டாராம்.

ஆனல் அன்று இரவே அவர் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டதைக் கேட்டு திடுக்கிட்டுப்போய் விட்டதாக, இரு அன்பர்களும் என்னிடம் வந்து தெரிவித்து, கலைப்புலவரின் மறைவுக்குப் பெரிதும் வருந்தினர். இவர்களைப் போல் இன்னும் எவ்வளவோ பேர்கள் அவர் பிரிவுக்காக இன்று பெரிதும் வருந்துவதைக் காண்கிறேன்.

* * *

சில ஆண்டுகளுக்கு முன் கொழும்பிலே பிரின்ஸிபால் அஸீஸ் வீட்டில் கலைப்புலவருக்கு ஒரு பிரியாவிடை உபசாரம் நடந்தது. டில்லியில் நடைபெற்ற ஆசிய எழுத்தாளர் மகாநாட்டுக்கு, இலங்கையின் சார்பாகச்செல்லும் கலைப்புலவரை வழியனுப்ப, பல கல்விமான்களும், அறிஞர்களும் அங்கு கூடியிருந்தனர். அச்சமயம் கலைப்புலவர், நமது கலை, கலாசாரம், ஆகிய ஒற்றுமை இவற்றைப்பற்றி ஆங்கிலத்தில் செய்த அருமையான பிரசங்கம் என்மனதைப் பெரிதும் கவர்ந்தது. இப்பேர்ப்பட்ட ஓர் அறிஞர் இலங்கையின் சார்பாக டில்லிக்குச் செல்வது இலங்கைக்கே மிகப் பெருமை என்று உணர்ந்தேன். அம்மகாநாட்டில் அவர் செய்த பிரசங்கம் பலதேச பாராட்டுதலையும் பெற்றது. அவரது மறைவு இலங்கா மாதாவுக்கே பெருநஷ்டமாகும்.

* * *

ஒரு சமயம் அவரது வீட்டிலே சில நாட்கள் தங்கியிருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது சிவபக்தியையும், கலைப்பண்பையும், விருந்தோம்பலையும், விரிந்தநூல் அறிவையும் நெருங்கி அறியமுடிந்தது.

சிலவாரங்களுக்குமுன் அவர் தம் வீட்டிலே, இந்திய உதவி ஹைகமிஷனர் மணி அவர்களுக்கு அளித்த அருமையான விருந்துபசாரத்தைப்பற்றி அதில் கலந்துகொண்ட ஓர் அன்பர் பெரிதும் பாராட்டினர். இந்தியா-இலங்கை நட்புறவைப்பலப்படுத்தும்உயிர்ப் பாலமாக இருந்து தொண்டாற்றினர் அவர்.

* * *

ராஷ்டிரபதி ராஜேந்திரப் பிரசாத் யாழ்ப்பாணம் வந்தாரல்லவா? அப்போது இங்கு வரவேற்பதற்கான ஒழுங்கு முறை பொறுப்பை வரவேற்புக்குழு அவரிடம் ஒப்புவித்தது. தமிழ்ப் பண்பிற்கேற்ப, விமான நிலையத்திலே எல்லா ஒழுங்குகளையும் பலரும் மெச்சும்படி, கலைப்புலவர் செய்திருந்தார். அந்த மகத்தான வரவேற்பு யாழ்ப்பாணத்துக்கே பெருமையளிப்பதாக இருந்தது.

கலைப்புலவர் நம்மை விட்டு திடீரென மறைந்து விட்டார். அந்த ஸ்தானத்தை நிரப்ப இனி யார் இருக்கிறார்கள்.

# “தேசிய ஆசிரியர் சங்கம் இலங்கைக்கு அவசியம்”

## ஆசிரியர் சங்க மகாநாட்டில் திரு. சபாரத்தினம் கருத்து

## ‘வேலையற்றோருக்கும் எம். பி. க்களுக்கும்தானா அரசியல் உரிமை’

—திரு. ஆரியவன்ச

இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. கே. நேசையா பேசும்போது குறிப்பிட்டதாவது:-

1956-ம் ஆண்டில் இந்த நாட்டில் ஏதோ பெரிய புரட்சி ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள். இந்தப் புரட்சியின் பின் நாடு முன்னேறியிருக்கிறதா அல்லது பின்னேற்றமடைந்துள்ளதா என்பதை நன்றாக ஆலோசனை செய்து முடிவுகாணவேண்டும். பழைய காலனி ஆட்சி முறைதான் இன்றும் இருப்பதாகச் சொல்லவேண்டும்.

பிரிட்டிஷார் இந்த நாட்டிற்கு நன்மையும் தீமையும் செய்திருக்கிறார்கள். மக்கள் ஆலோசித்து தமது விருப்பத்திற்கு ஆட்சி புரியும் முறையை அவர்கள் அளித்துள்ளனர். இந்த முறை காலாகாலத்தில் முற்றாக மறைந்துவிடுமோ எனத் தோன்றுகிறது. இந்த நாட்டின் கல்விக் கொள்கையை நிர்ணயிக்கவேண்டியவர்கள் இந்த நாட்டின் பொதுமக்களே. இந்த நாட்டின் கல்விக் கொள்கையைத் தீர்மானிக்கும் பொறுப்பு மக்களால் தெரிவு செய்யப்படாத ஒரு அமைச்சரின் கையில் கொடுக்கப்பட்டுள்ளது. மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்காத அமைச்சரினால் இந்நாட்டு மக்களுக்கேற்ற திறம்பாடான கல்வியை எப்படி வழங்கமுடியும்?

தேசிய கல்விக் கமிஷன் எந்தவிதமான திட்டங்களை வெளியிடப்போகிறதோ தெரியவில்லை. தேசிய கல்வி நான்கு அம்சங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். அரசு, சமுகம், ஆசிரியர், பிள்ளைகள் என்ற நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்படுவது அவசியம்.

கல்வி சம்பந்தமான பிரமாணங்களை உண்டாக்கும் உரிமை அரசுக்கு இருக்கவேண்டும். இப்படியான பிரமாணங்கள் ஆசிரியர்களைப் பிரதிநிதிகளாகக்கொண்ட சங்கங்கள் முதலியவற்றின் ஆலோசனையோடு சுதந்திரமான கல்விப்போக்கை உட்கொண்டதாக அமைவது அவசியம்.

### மக்களுக்கு உரிமை வேண்டும்

கல்விக் கொள்கையை உருவாக்குவதில் பொதுமக்களுக்கு போதிய உரிமை வழங்கப்படவேண்டும். ஜனநாயக நாட்டில் மக்கள் தமது விருப்பத்திற்கமைந்த கல்வி வசதியை ஆக்கிக்கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். அந்தந்த இடத்திலுள்ள பாடசாலை சம்பந்தமான முடிவுகளை அப்பகுதி மக்களே தீர்த்துக்கொள்ளவேண்டும். கொழும்பிலிருந்து ஒரு கோஷ்டி மாத்தறையிலுள்ள பாடசாலை சம்பந்தமான முடிவைச் செய்யக் கூடாது.

இங்கிலாந்து போன்ற முன்னேற்றமான இடங்களில் ஆசிரியர்களுக்கு அதிக உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு கட்டுப்பாடின்றி சுதந்திரமாக ஆலோசிக்கும் உரிமை வழங்கப்பட்டால்தான் நல்ல ஆசிரியர்களாக இருக்க முடியும். அரசாங்கமும் குறுகிய காலச் சலுகைகளை ஆசிரியர்களுக்கு வழங்கிவருகிறது. ஆசிரியர் சங்கங்களும் குறுகிய நோக்கமுடைய பிரேரணைகள் பலவற்றைத்தான் தமது பிரச்னைகளாகக் கொண்டிருப்பது வருத்தப்படவேண்டிய ஒன்றாகும். ஆசிரியர்கள் எப்பொழுதும் நாட்டுக்குப் பயனளிக்கக் கூடிய நீண்டகால நல்ல நோக்கமுடைய பிரச்சினைகளையே கொண்டு போராடவேண்டியது அவசியம்.

### ஆசிரியர்கள் அடிமைகளல்ல!

ஆசிரியர்கள் இந்த நாட்டின் அடிமைகளல்ல. இதனை ஒவ்வொரு ஆசிரியனும் உணர்ந்து செயலாற்றவேண்டும். ஆசிரியர்கள் நியமனம் அரசியல் நோக்கத்துடன் நடைபெற ஆரம்பித்துள்ளது. இந்த குறுகிய நோக்கம் தேசியகல்வி அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையானது.

இந்நாட்டில் வசிக்கும் அத்தனை பிள்ளைகளுக்கும் கல்வியில் சமசந்தர்ப்பமும் உரிமையும் வழங்கப்படவேண்டும். இலங்கையின் வளர்ச்சி தோட்டப்பகுதி மக்களின் உழைப்பிலேயே தங்கியிருக்கிறது. இவர்களின் இரத்தஞ் சிந்திய கடும் உழைப்பின் வருவாயைக் கொண்டே கல்வி வசதியும் இங்கு ஏற்படுத்தப்படுகிறது. நிலைமை இப்படியிருக்கும்போது அப்பகுதிப்பிள்ளைகளுக்கு கல்வியில் சமசந்தர்ப்பமும் வசதியும் அளிக்கப்படாமல் வருவது நீதியீனமான செயலாகும். தோட்டப்பகுதிப் பிள்ளைகளுக்கு நல்ல முறையில் கல்வி வசதி கொடுக்கப்படாத இந்த அநீதி என்னை இன்று வலுவாக வாட்டிவருகிறது. இந்த அநீதியைப் போக்க ஆசிரியர்கள் உழைக்கவேண்டியது அவசியம். தேசியக் கல்வித்திட்டமும் தேசிய அபிவிருத்தியும் இந்த நாட்டில் ஏற்பட்டு முற்போக்கான கல்விக்கொள்கையை விருத்திசெய்யவேண்டுமானால் தோட்டப்பகுதிப் பிள்ளைகளின் விஷயமும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும்.

## ஆசிரியர்கள் இந்த நாட்டின் அடிமைகளல்ல!

### திரு. நேசையா பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

“ஆசிரியர்கள் அனைவரும் ஒரே அமைப்பின்கீழ் ஒன்றுபடவேண்டும். எங்களின்குரல் ஒன்றுபட்டதாக இருந்தால் பலம்வாய்ந்ததாக இருக்கும். இதற்கு இலங்கையில் ஓர் தேசிய ஆசிரியர் சங்கம் அவசியம். இதன்கீழ் ஆசிரியர்கள் ஐக்கியப்பட்டு செயலாற்றினால் தான் எமது கோரிக்கைகளில் ஒருமைப்பாடும், பலமும் இருக்கும்.”

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 15வது வருடாந்தக் கூட்டத்தில் பேசிய அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. என் சபாரத்தினம் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. கு. வி. செல்லத்துரை தலைமை வகித்தார்.

திரு. சபாரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

ஒரு தொழிலின் குறைவு நிறைவுகளை ஒரேகுரலில் எடுத்துக்காட்டினால்தான் அரசாங்கமோ பொதுமக்களோ அக்கறையுடன் அதைக் கவனிக்கக் கூடியதாக இருக்கும். ஆசிரியர்களிடையே பிரிவினையைக் காட்டக்கூடியதாக பல சங்கங்கள் இயங்கிவருவதாலும், கோரிக்கைகளில்கூடப் பிரிவினையைக் காட்டிக்கொண்டு வந்தமையாலும், ஆசிரியர்களுக்கிடையே பலவீனம் இருக்கிறதென்றும் தப்பான அபிப்பிராயம் அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனாலேயே காலத்துக்குக்காலம் விகற்பமான சுற்றுநிருபங்கள் கல்விப்பகுதியிலிருந்து ஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்டுவருகிறது.

### அரசியல்வாதிகளே காரணம்

ஸ்ரீலங்கா ராஜ்ய குருசங்கக் காரியதரிசி திரு. எல். ஆரியவன்ச பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

1958-ம் ஆண்டுக்குப் பின்னும் ஒரு கலவரத்தை இந்நாட்டில் ஏற்படக்காரணமாக இருந்தவர்கள் அரசியல்வாதிகள். இலங்கை அரசியல்வாதிகள் நாட்டிற்கு உரிய நன்மையைப் பார்த்தது கிடையாது. தமது நிலைமையில் நன்மையைச் செய்யமுயன்று நாட்டுக்குத் தீமையைக் கொண்டுவருகிறார்கள்.

அகில உலகிலுமுள்ள ஆசிரியர்கள் அரசியல் உரிமைகளைப் பெற்று வாழ்ந்துவரும் இக்காலத்தில் இலங்கையிலுள்ள ஆசிரியர்களின் அரசியல் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றன. ஆசிரியர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஆசிரியர் அரசியல் உரிமையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தேசிய கல்விக்கமிஷன் தமது அறிக்கையில் இந்த உரிமை கிடைக்கக்கூடியதாக வலியுறுத்தவேண்டும்.

இன்றைய போக்கில் பாராளுமன்ற அங்கத்தவரும் வேலையற்றோருமேதான் அரசியல் உரிமையுடன் வாழக்கூடியதாக இருப்பதுபோல் தெரிகிறது.

---


### உபதலைவர் தெரிவு

வேலணை, ஞாயிறு

வேலணைக் கிராம சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. ப. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது உபதலைவராக ஏழாம் வட்டார அங்கத்தவர் திரு. ச. சபாரத்தினம் தெரிவுசெய்யப்பட்டார். திரு. சபாரத்தினத்திற்கு 5 வாக்குகளும் எதிராகப் போட்டியிட்ட திரு. இராமசாமிக்கு 4 வாக்குகளும் கிடைத்தன.

சென்ற ஆண்டு தலைவர் தெரிவில் பெரும்பான்மை அங்கத்தவர்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி கடந்த முறை 8-ம் வட்டார அங்கத்தவர் திரு. நா.வீரசிங்கம் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த முறை 5-ம் வட்டார உறுப்பினர் திரு. ம. சு. தருமலிங்கம் உபதலைவராக தெரியப்படுவதென இருந்தபோதிலும் திரு. தருமலிங்கம் இந்த ஆண்டு உபதலைவர் தேர்தலுக்கு நிற்க விரும்பாததால் அவரே திரு. சபாரத்தினத்தை உபதலைவராகப் பிரேரித்தார். அடுத்த ஆண்டு திரு. தருமலிங்கம் உபதலைவராகத் தெரிந்தெடுக்கப்படலாமென்று எண்ணப்படுகிறது.

---



தாய்லந்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாய் அவதிப்பட்ட அகதிகளுக்கு அமெரிக்க விமானப்படை விமானங்கள் உணவு மூட்டைகளை வீசினர். அவ்வித நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஒரு விமானத்திலிருந்து உணவு மூட்டைகள் வீசப்படுவதைக் காணலாம்.

---

## மூளையில் ஆச்சரியகரமான சத்திர சிகிச்சை

### இந்திய டாக்டரின் சாதனை

ஆக்ரா, பெப். 25

ஆக்ராவில் ஒரு டாக்டர், மூளையில் ஆச்சரியமான முறையில் ஒரு சத்திர சிகிச்சையை செய்து முடித்திருப்பதாயும் முதன்முறையாக இவ்வித சத்திர சிகிச்சை இப்போதுதான் செய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

இந்த டாக்டர், ஒரு வருடைய மூளையிலிருந்த ரத்தநாளம் வெடித்திருந்ததை அகற்றி இறந்த ஒருவரின் இரத்த நாளத்தைக் கொண்டு வெற்றிகரமாகச் சீர்படுத்தியதாய் அறிவிக்கப்பட்டது.

2 மாதங்களுக்கு முன் தலையில் குண்டு ஒன்று வெடித்ததின் காரணமாய் அவரது ரத்தநாளம் வெடித்துப் போயிற்று. 4 மணி நேரத்துக்கு முன் இறந்த ஒருவரின் ரத்த நாளத்தை எடுத்து நோயாளிக்கு அவர் பொருத்தினர்.

---

அறிந்த கதை

## ‘டன்னும் டிக்கும்’

— “சின்னப்பிள்ளை” —

வேடிக்கையான பல கதைகளை நாம் சிறு வயதில் வாசித்திருப்போம்; கேட்டிருப்போம். இவற்றில் சில, இன்னும் நமது மனதை விட்டு அகலாமல் இருக்கின்றன. அந்த வகையில் என் மனதில் சுமார் ஐந்து வருட காலத்துக்கு முன்னர் இடம் பெற்ற ஒரு கதையைச் சொல்லுகிறேன். வாசித்துப் பாருங்கள்.

ஒரு ஊரில் ஒரு சாமியார் இருந்தார். அவருக்கு அருமையான சீடன் ஒருவன் இருந்தான். சாமியாரின் மனதுக்கு ஒவ்வாத எதையும் அவன் செய்யமாட்டான். சுருங்கச் சொல்லப்போனால் சாமியாரும் சீடனும் ஜாடியும் மூடியும் போல் தான்.

சாமியாருக்கு எவரையும் மதிப்புடன் அழைப்பது பிடிக்காது. அதாவது, ஒருவரைத் ‘திரு’வுடன் அழைப்பது கூட பிடிக்காது. சாதாரணமாக சாமியாரின் வீட்டுக்கு செல்வராஜா என்ற பெயரை உடைய ஒருவர் வந்தால், சீடன் சாமியாரிடம் ஓடோடிச் சென்று, ‘குருவே.........செல்வராஜா வந்திருக்கிறார்............’ என்று சொல்லுவான். திருநாவுக்கரசு என்ற பெயரையுடைய ஒருவர் சாமியார் வீட்டுக்கு வந்தால், சீடன் ஓடிச்சென்று, “.........குருவே......நாவுக்கரசு வந்திருக்கிறார்.........”என்று சொல்லுவான்.

ஒரு நாள், சாமியாரின் வீட்டில் கள்வர்கள் புகுந்து பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டனர். உண்மைச் சம்பவத்தை அறியாத சாமியார், சீடனிடம் நடந்தவிபரத்தைத் தெரிவிக்கும்படி கேட்டார். சீடன் உடல் நடுங்க.........உள்ளம் பதை பதைக்க.........“குருவே .........டன் வந்து. டிக்கொண்டுபோய்விட்டான்... என்று சொன்னான்.

சாமியாருக்கு தூக்கி வாரிப் போட்டது! “டேய்......என்னடா உளறுகிறாய்......என்ன நடந்தது...?” என்று இரைந்து கேட்டார் சாமியார். அப்போதும்சீடன், “......உண்மைதான் குருவே......டன் வந்து டிக்கொண்டு ஓடிவிட்டான்......” என்று கூறினான், சாமியாருக்கு ஆத்திரம் அளவு மீறிக்கொண்டு வந்தது. மேலும் மேலும் சீடனை ஏசவே, சீடனும் பொறுமையை இழந்து தனது கடமையை மறந்து கூறத் தொடங்கினான். “குருவே...... உங்களுக்குத் தான் ‘திரு’ என்ற வார்த்தை பிடிக்காதே. அதனால் தான், ‘திரு’ என்ற வார்த்தையை மறைத்து நான் அப்படிக் கூறினேன். உண்மையில்......ஆண்டவன் சத்தியமாக......திருடன் வந்து திருடிக்கொண்டு......” என்று சீடன் கூறி முடிப்பதற்குள் சாமியார் குறுக்கிட்டு, “போதும் நிறுத்தடா......” என்று சொன்னார். கதையும் முடிந்தது. சாமியாரின் “திரு”வும் மறைந்தது!

---

## வட்டுக் கலைநகர் இளைஞர் வெற்றி

வட்டுக்கோட்டை, ஞாயிறு

வட்டுகலை நகர் இளைஞர் கோஷ்டிக்கும் மூட்டுச் சந்தை ஜனசமுக இளைஞர் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப்போட்டியில் வட்டுகலை நகர் இளைஞர் கோஷ்டி வெற்றி பெற்றது. செல்வன் பொ. தெண்டாயுதபாணி மத்தியஸ்தராகக்கடமையாற்றினர்.

# "பக்தியோடும் உணர்ச்சியோடும் பாடவேண்டும்"

இரண்டாம் நாள் இசை விழா மாலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்த வடபெரும்பாக வித்தியாதிசாரி திரு எஸ். தணிகாசலம் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்நாட்டின் இசைக்கலையில் அபிவிருத்திசெய்த பெரியார்கள் ஸ்ரீ தியாகரரிஜ சுவாமிகள், முத்துச்சாமி தீட்சிதர், ஸ்ரீ சியாமசாஸ்திரிகள் ஆகிய மூவர்சிறந்துவிளங்குகின்றனர். அவர்களுள் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் முதன்மை பெற்றவராவார். அவரது ஞாபகவிழா கொண்டாடுவது இசைக் கலைஞர்களுக்குச் செய்யும் சிறப்பாகும். எமது நாட்டில் பிள்ளைகட்கு சங்கீதத்தைப் பயிற்றும்போது தேவார திருவாசக இசையமுதங்களை உணர்ச்சியுடனும் பக்தியோடும் பாடவேண்டியது அவசியமாகும். அங்ஙனமான முறையில் இசையை வளர்ப்பது கலைஞர்களுடைய கடமையாகும்.

இந்த விழாவில் சங்கீத வித்துவான்கள் வி. சிவராசா, எஸ். எஸ். இரத்தினம்பிள்ளை, கே. ஆர். நடராசா, திருமதி பூமணி ராசரத்தினம் ஆகியோர் இசை விருந்தளித்தனர்.

திரு. பீ. எஸ். ஆறுமுகம் பிள்ளை கோஷ்டியாரின் கிஞ்சித் கச்சேரியும் நடைபெற்றது. சங்கீதபூஷணம் எஸ். விஞசித்தம்பி தியாகராஜ சுவாமிகள் பற்றி கதாப்பிரசங்கம் செய்தார்.

திருவாளர்கள் ஏ எஸ். இராமநாதன், எம். என். செல்லத்துரை, வி அம்பலவாணர், த. ஜெயசுந்தரம், கே. சி[illegible]திவிநாயகம், வி. கே. குமாரசாமி ஆகியோர பக்க வார்த்தியங்கள் வாசித்தனர்.

## வேலணை கி. ச. உப தலைவர்

ஊர்காவற்றுறை, சனி

வேலணைக் கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் அண்மையில் அதன் தலைவர் திரு. ப. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற போது சபையின் சிரேஷ்ட அங்கத்தவரான திரு. ச. சபாரத்தினம் புதியவருடத்திற்குரிய உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவருடன் போட்டியிட்ட 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. இராமசாமிக்கு நான்கு வாக்குகளும் 7-ம் வட்டார அங்கத்தவரான திரு. சாபாரத்தினத்திற்கு ஐந்து வாக்குகளும் கிடைத்தன. தலைவரின் ஒரு அதிகப்படி வாக்கினால் திரு. சபாரத்தினம் வெற்றி பெற்றார்.

—

## மலாயர் ஆர்ப்பாட்டம்

கராச்சி, பெப். 24

மேற்குபாகிஸ்தானில் மாணவர்கள் நேற்றுமீண்டும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

—

## புதிய தலைவர் தேர்தல்

பதுளை, சனி

திடீரென பின் போடப்பட்ட முகமாலைக் கி. ச. தலைவர் தெரிவு இம்மாதம் 26-ந் திகதி காலை நடைபெறும்.

## பெற்றார் ஆசிரியர்சங்க கூட்டம்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த புதன்கிழமை இப் பாடசாலை மண்டபத்தில் கிளிநொச்சி எம். பி. திரு. அ. சிவசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவில் திரு. அ. சிவசுந்தரம் எ. பி. உபபோஷகராகவும், தலைமையாசிரியர் திரு. இ. தாமோதரம்பிள்ளை தலைவராகவும், பொலிஸ் அதிகாரி திரு. எஸ். பி. மூர்த்தி உப தலைவராகவும், நீர்ப்பாசன இலாகாத் தொழில்நுட்ப உதவி அதிகாரி திரு. ஐ இராசதுரை காரியதரிசியாகவும், உதவியாசிரியர் பண்டிதர் க. சிங்காரவேலு உதவிக் காரியதரிசியாகவும், திரு இராசரத்தினம் தனாதிகாரியாகவும், திருவாளர்கள் செ. கந்தையா, க. நல்லதம்பி, பூ. பெருமாள், அ. சரவணபவன் ஆகியோர் நிருவாகசபை அங்கத்தவர்களாகவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

விஞ்ஞான ஆசிரியர் ஒருவரையும் கூடுதலான ஆங்கில உதவி ஆசிரியர் ஒருவரையும் நியமித்துத் தருமாறு வித்தியாபகுதியாரைக் கேட்கும் பிரேரணையும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

—

## போபாலில் ஊரடங்குச் சட்டம் ரத்து

போபால், பெப். 24

போபாலில் அமுலிலிருந்த ஊரடங்குச் சட்டம் இன்று ரத்து செய்யப்பட்டது.

# 'இரத்தவெள்ளத்தில் இருவரும் கிடந்தனர்'

## மல்லாக கொலைவழக்கில்சாட்சியம்

மாவிட்டபுரம், ஞாயிறு

சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி ஏழாலையைச் சேர்ந்த செல்லையா சிவபாதசுந்தரத்தை மல்லாகச் சந்தியில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாக மல்லாகத்தைச் சேர்ந்த சகோதரர்களான தம்பிப்பிள்ளை கனகரத்தினம், தம்பிப்பிள்ளை நடராசா ஆகிய இருவர் மேலும் சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி தமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மல்லாகத்தைச் சேர்ந்த சின்னட்டி சின்னவன் சாட்சியமளித்தார்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. பி: யே. செருமின் சென்ற தவணையின்போது தொகுப்புரை நிகழ்த்துகையில் இச்சம்பவத்தைப்பற்றி பொலிஸுக்குத் தகவல் கொடுத்தவரான சின்னட்டி சின்னவன் ஏன் சாட்சியாக அழைக்கப்படவில்லை? என ஓர் பிரச்சினையைக் கிளப்பியுமையால் அவர் நேற்று சாட்சியாக அழைக்கப்பட்டார்.

சின்னட்டி சின்னவன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

கடந்தவருடம் ஆகஸ்ட்மாதம் 12-ம் திகதி நண்பகல் 2 அல்லது 2-30 மணியளவில் நான் மல்லாகச் சந்திக்குச் சென்றேன். நான் அங்கு இரத்தினத்தின் சைக்கிள் கடைக்குள் நின்றேன். சைக்கிள் கடை முதலாவது எதிரியான தம்பிப்பிள்ளை கனகரத்தினத்தின் கராச்சுக்குப் பக்கத்தில் இருக்கிறது. நான் இரத்தினத்தின் கடைக்குள் நின்றபொழுது முதலாவது எதிரி தனது காரில் வந்தார். முதலாவது எதிரி காரை கராச்சினுள் நிறுத்தினார். அவ்வேளையில் காரை யாரோ உடைக்கும் சத்தம் கேட்டது. அச்சத்தம் என்னவென்று நான் போய்ப் பார்த்தபோது இராசதுரை ஒரு கதிரையை எடுத்து காரின் மேல் ஓங்கி அடித்தார். முதலாவது எதிரி காரில் இருந்து இறங்குவதற்காக முன்கதவைத் திறந்தபோது முட்டாள் கனகரத்தினம் முதலாவது எதிரியை ஒரு இரும்பால் தாக்கினார். முட்டாள் கனகரத்தினம் அடித்த அடி முதலாவது எதிரியின் உடம்பில் கழுத்திலோ அல்லது தலையிலோ தான் விழுந்தது என என்னால் திட்டமாகக் கூற முடியாது. இதற்குப் பின் முட்டாளின் தம்பி, ஞானம், இரத்தினம், இராசதுரை ஆகியோரும் முதலாவது எதிரியான கனகரத்தினத்தை தாக்கினர். அவர்கள் தங்கள் கைகளில் பயங்கரமான ஆயுதங்கள் வைத்திருந்தனர். நான் இச்சம்பவத்தைப் பார்த்துக்கொண்டு நின்றேன்.

### துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது

இச்சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் நான் இரத்தினத்தின் சைக்கிள் கடைக்குள் சென்றேன். அப்போது துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. இச்சத்தம் என்னவென்று பார்ப்பதற்காகக் கடைக்குள்ளிருந்து வெளியே வந்தபோது இச்சம்பவத்தில் கொலைசெய்யப்பட்ட மற்ற நபரான கந்தையா 'ஐயோ' எனக் கதறினார். அவரை முட்டாள் கனகரத்தினம், முட்டாளின் தம்பி இராசதுரை, இரத்தினம், ஞானம் ஆகியோர் பயங்கரமான ஆயுதங்களால் தாக்குவதைக் கண்டேன். கந்தையா நிலத்தில் விழுந்ததும் அவரை சின்னப்பு துரையப்பா, (மற்றோர்கொலைவழக்கில்பேதுளதிரியாக குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் இருக்கையில் அண்மையில் இறந்தவர்) கல்லால் தாக்கினர். இச்சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து நான் புறப்பட்டுச் செல்ல எத்தனிக்கையில் இராசதுரை என் தலையில் இரும்பால் தாக்கினர். எனக்கு இதனல் காயம் ஏற்பட்டது

### இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்

இச்சம்பவத்தில் கொலை செய்யப்பட்டவர்களான ஏழாலையைச் சேர்ந்த செல்லையா சிவபாதசுந்தரம், மல்லாகத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கந்தையா ஆகிய இருவரும் ஒருவருக்குப் பக்கத்தில் ஒருவராக இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள். செல்லையா சிவபாதசுந்தரம் இறந்துகிடக்கக் காணப்பட்டார். கந்தையா இரத்தக் காயங்க[illegible] உயிருடன் கிடந்தார்

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து மல்லாகம் உப தபால் கந்தோருக்கு ஓடிச் சென்று தபால் அதிகாரியிடம் சுன்னாகம்பொலிஸுக்கு மல்லாகச் சந்தியில் கலம்பவம் நடைபெறுவதாக அறிவிக்கும்படி கூறினேன். 'அடிபட்டு கலகம் நடக்குது பொலிஸுக்கு அறிவியுங்கோ' என்று தபால் அதிகாரியிடம் கூறினேன். என்ன என்ன ஆயுதங்களை கலகக்காரர் பாவித்தார்கள் என்பதைப் பற்றியோ அல்லது எவருக்கும்எவருக்கும் இடையில் கலகம் நடக்குதோ எனநான் தபால்அதிகாரியிடம் கூறவில்லை.

நீதிபதி: நீர் ஏன் துப்பாக்கிச் சூட்டைப்பற்றியோ, இறந்தவரைப்பற்றியோ அல்லது யார் யாருக்கிடையில் கலகம் நடைபெற்றது என்பதைப் பற்றியோ தபால் அதிகாரியிடம் கூறவில்லை?

சாட்சி:- நான் பயந்துவிட்டேன் ஐயா!

நீதிபதி:- நீ உனது காயத்தில் இருந்து வடிந்த இரத்தத்தினல் தபால் கந்தோரை அன்று அசுத்தப்படுத்தினீர். இன்று இவ்வழக்கில் சாட்சியாக வந்து வழக்கைப் பழுதாக்கிவிட்டீர்.

விசாரணை அடுத்தமாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

—

## இணுவில் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், சனி

இணுவில் இளந்தாரி கோவில் சன சமூக நிலையத்தின் சார்பில் முத்தமிழ் விழா எதிர் வரும் மார்ச் மாதம் 2,3,4, -ம் திகதிகளில் நடைபெற விருக்கிறது.

முதல் நாள் இயற்தமிழ் விழாவும் 2-ம் நாள் இசைத்தமிழ் விழாவும், 3-ம்நாள் நாடகத் தமிழ் விழாவுமாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

—

## கோவாவில் ராணுவ வரி ரத்து

பஞ்சிம், பெப். 25

கோவாவில் இதுவரை சில குறிப்பிட்ட வகுப்பினருக்கு விதிக்கப்பட்டிருந்த ராணுவ வரி, பாதுகாப்புவரி ஆகியவைகளை கோவா ராணுவ கவர்னர் கண்டத் ரத்துச் செய்தார்.

அந்நியர்களுக்கு அடையாளச் சீட்டு வழங்கப்பட்டுவந்த முறையும் ரத்துச்செய்யப்பட்டுவிட்டது.



# ‘உணவு உற்பத்தியைபெருக்க மக்கள் உழைக்கவேண்டும்’

— திரு. கே. கனகரத்தினம்

வட்டுக்கோட்டை, ஞாயிறு ‘உணவு உற்பத்தியைப் பெருக்க மக்களெல்லோரும் ஊக்கம் காட்ட வேண்டும். எங்கள் பகுதியிலுள்ள இளம் விவசாயச் சங்கங்களுள் நன்கு செயல்படும் சங்கத்துக்கு வெள்ளிக்கிண்ணமொன்று பரிசாக வழங்கப்படும்’ என இளைப்பாறிய ஆடிட்டர் ஜெனரல் திரு. கே. கனகரத்தினம் வட்டுக்கோட்டை கிராமசபையின் புதிய மார்க்கட்டைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். வட்டுக்கோகோட்டை கிராமசபைத் தலைவர் முதலியார் எஸ். சின்னத்தம்பி பேசுகையில் கூறியதாவது:

‘பலகாலமாக எதிர்பார்த்து வந்த நல்லதொரு கருமம் இன்று நிறைவேறியுள்ளது. மக்கள் காய்கறிகளை நன்கு உற்பத்தி செய்து இப்புதிய மார்க்கட்டுக்கு அனுப்பினுல் பாவனையாளர்களுக்கு அது உதவுவதாக இருக்கும். சிகரெட் புகையிலை உற்பத்தியையும் பெருக்க நாம் முயல வேண்டும்.

கிராமத்திலுள்ளவர்கள் தமது அயலவர்களைப்பற்றி அதிக அக்கறைகாட்டுவதில்லை. இதனுல் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கிறது.

முன்னைநாள் கிராமசபைத் தலைவர்களான திருவாளர்கள் ஏ. டி. வேதாபரணம், ஆர். சுப்பிரமணியம் ஜே. பி. ஆகியோரின் சேவையையும், காலம் சென்ற பி. எம். நடராசாவின் சேவையையும் பாராட்டிப் பேசிய பின்னர் 1959-ம் வருடத்திலிருந்து கிராமசபைக்கு செலுத்த வேண்டிய வரியை வரிஇறுப்பாளர் செலுத்த வேண்டுமெனத் தமது பேச்சின்போது முதலியார் சின்னத்தம்பி கேட்டுக் கொண்டார்.

வடபகுதி ஸ்தலஸ்தாபன சேவை உதவி அதிபர் திரு. என். சிவராஜா பேசியதாவது:

முதலியார் சின்னத்தம்பியை இக்கிராமசபை தலைவராகக் கொண்டுள்ளது கிராமசபையின் அதிர்ஷ்டமென்றே கூற வேண்டும். எமது இலாகாவின் பூரண ஒத்துழைப்பும் இந்த சபைக்குக் கிடைக்குமென நான் உறுதிகூறுவேன்.

வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. டி. டபிள்யு. செல்வரத்தினம் கூறியதாவது:

சனத்தொகை பெருகி வருகையில் அதற்குத் தேவையான உணவும் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே பொதுமக்கள் அதிக உணவை உறபத்தி செய்வதில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

கல்வி கற்ற வாலிபர்கள் விவசாயத் துறையில் ஈடுபட்டு உழைக்க தற்பொழுது அதிக வாய்ப்பளிக்கப்பட்டு வருகிறது. வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள கல்வி கற்ற 50 வாலிபர்களுக்கு பெரிய விளானிலுள்ள விவசாயப் பண்ணையில் விவசாயம் செய்யவும், கோழி வளர்க்கவும், கால்நடைகள் வளர்க்கவும் விரைவில் வசதிசெய்து கொடுக்கப்படும்.

அரசாங்கம் தனிப்பட்டவர்களிடமிருந்து 30 ஏக்கர் நிலத்தை இவ்வித விவசாயப் பண்ணைகள் நடத்த பெருந்தொகைப் பணம் கொடுத்து வாங்க அதிகாரம் அளித்துள்ளது. இளம்விவசாயிகள் இந்த நிலத்தில் விவசாயம் செய்ய முன்வர வேண்டும். அவர்கள் கடமை உணர்வோடு விவசாயம் செய்து இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

## போட்டியின்றி வெற்றி

மாவிட்டபுரம், ஞாயிறு யாழ்ப்பாண மாவிட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவின்கீழ் அரசாங்க மின்சார இலாகா கோஷ்டிக்கும் யாழ்ப்பாணப் பொலிஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெறவிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மின்சார இலாகா கோஷ்டி போட்டிக்கு சமுகமளிக்காததால் பொலிஸ் கோஷ்டி போட்டியின்றி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மறியல்சாலை கோஷ்டிக்கும் தபால் இலாகாக் கோஷ்டிக்குமிடையே நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டிக்கு மறியல்சாலை கோஷ்டி சமூகமளிக்காததால் தபால் இலாகா போட்டியிடாமலேயே வெற்றிபெற்றது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

திங்கள் 26-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிளாரினட், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலையஒலிப் பதிவுகள் 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 யோகா சிவசுப்பிரமணியம் - வீணை, 8-0 முஸ்லிம் நிகழ்ச்சி 9-15 தமிழ்மூலம் சிங்களம் - 21, 9-30 தேர்ந்தஇசை 9-45 பிஸ்கா சிவகுமாரன் - பாட்டு.

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-30 கீழாம்பூர் எஸ். கே. சங்கரன் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 சௌந்தரம் கிருஷ்ணன் - பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 நல்லுரை, 7-40 திரைப்படஇசை, 8-00 கீழாம்பூர் எஸ். கே. சங்கரன் - பாட்டு, 8-30 சௌந்தரம் கிருஷ்ணன் - பாட்டு, 0-30 இசைக்கோவை.

## ரெக்கட் கழகம் வெற்றி

மாவிட்டபுரம், ஞாயிறு சுன்னுகம் ரெக்கட் விளையாட்டுக் கழகத்திற்கும் தையிட்டி ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே தையிட்டி மைதானத்தில் நடைபெற்ற ஓர் கைப்பந்தாட்டப் போட்டியில் சுன்னுகம் ரெக்கட் விளையாட்டுக் கழகம் 2—0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

திரு. எஸ். சிவக்கொழுந்து மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## வேலணை மத்திய கல்லூரி வெற்றி

ஊர்காவற்றுறை, ஞாயிறு வேலணை அரசினர் மத்திய கல்லூரிக் கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் ஊர்காவற்றுறை சென். யோசப் கிளப் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கைப்பந்தாட்டப் போட்டியில் இரு ஆட்டங்களிலும் வேலணை மத்திய கல்லூரிக் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர்.

சென்ற வெள்ளிக்கிழமை மாலை வேலணை அரசினர் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

## ஸ்புட்னிக் கழகம் வெற்றி

மாவிட்டபுரம், ஞாயிறு காங்கேசன்துறை ரோயல் விளையாட்டுக் கழகமும் ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகமும் கலந்து கொண்ட கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

திரு. கே. செல்வரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.




நீரில் கலந்தாலும்...
டியுடன் சேர்த்தாலும்...
கோப்பியுடன் பருகினுலும்!

விலை மலிவானுலும் ஸல் வெறும் சாதாரண

ஸல் பிரத்தியேகமான போஷாக்குச் சத்தும் பாலாடையின் சுவையும் கொண்டது—அது மிகவும் இனிப்பானது
விடுகிறது. உங்கள் டியுடனே, கோப்பியுடனே பாலுக்குப் பதில் ஸல்லை சேர்த்துக்கொண்டு பருகுங்கள். அதன் ப
இனிப்புக்கு மேல் தனியாகச் சீனி சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றே சொல்லலாம்! ஸல்லை வெற
ளாகிறது—அப்பொழுது அதன் நற்சுவையின் பூரண தன்மையை நன்ருக உணர்வீர்கள்! ஸல்லினுடைய தெவி
விரும்புவீர்கள் என்பது திண்ணம்.

ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

கு
உடன்

# மேனனை நான் ஏன் தாக்குகிறேன்?

## கிருபளானி விளக்கம்

பம்பாய், பெப். 25

தன்னை நேரில் தாக்க தைரியமில்லாதவர்கள் ஸ்ரீ கிருஷ்ண மேனனைத் தாக்குகிறார்கள் என்று பிரதம மந்திரி ஒரு கூட்டத்தில் பேசியதற்கு ஆச்சாரிய கிருபளானி பதிலளித்தார்.

என்னைப் பொறுத்தவரையில் பிரதம மந்திரியின் சில கொள்கைகளை நான் எப்போதுமே கண்டித்து வந்திருக்கிறேன் என்று ஸ்ரீ கிருபளானி சொன்னார்.

இப்போது குறிப்பாக ஸ்ரீ கிருஷ்ணமேனனையே தாக்கிப் பேசுவதன் காரணங்கள் என்னவென்பதையும் ஒன்று, இரண்டு என்று விரல்விட்டு வரிசையாகச் சொன்னார்.

"உதாரணமாக, சென்ற 4000 வருடங்களாகவே திபேத் சீனாவின் ஒரு பகுதியாக இருக்கிறது என்று தான் எழுதிய 'உலகசரித்திரதம்' என்ற நூலில் ஸ்ரீநேரு சொல்லவில்லை.

கம்யூனிஸட் சீனா ஐ. நா. வின் மனித உரிமைகள் சாசனத்தில் கையெழுத்திடவில்லை. ஆகையால் திபேத்தில் சீனர்கள் அட்டூழியம் செய்கிறார்கள் என்று அவர்களைக் குறைசொல்லமுடியாது என்று நேரு சொல்லவில்லை.

ஹங்கேரியில் நடந்த புரட்சி வெறும் தெருச்சண்டை என்று ஸ்ரீ நேரு சொல்லவில்லை.

ஆக்கிரமிப்பு என்றால் என்ன வென்பதை ஐ. நா. ஸ்தாபனம் வியாக்கியானம் செய்யவில்லை. ஆகையால் இந்தியாவில் சீனர்கள் ஊடுருவல் செய்திருப்பது ஆக்கிரமிப்பல்ல என்று ஸ்ரீ நேரு சொன்னதேயில்லை.

ரஷ்யா வான வெளியில் நடத்தும் அணு ஆயுதச் சோதனைகளும் அமெரிக்கா பூமிக்கடியில் நடத்தும் சோதனைகளும் ஒரே மாதிரியானவைதான் என்று ஐ. நா. விற்குப் போய் பேசியது ஸ்ரீ நேருவல்ல. இப்படியெல்லாம் பேசியவர் ஸ்ரீ மேனன்தான். அதனால் தான் குறிப்பாக அவரை எதிர்க்கிறோம்.

இந்திய மக்கள் என்னிடம் அன்பு செலுத்துகிறார்கள் என்பதற்காக என்னைத் தாக்கவில்லையோ என்னவோ என்று ஸ்ரீ நேரு கூறுகிறார். என்னைப் பொறுத்தவரையில் இது சரியல்ல. ஏனெனில் பார்லிமெண்டில் பல சமயங்களில் ஸ்ரீ நேருவின் கொள்கைகளைக் கண்டித்து நான் பேசியிருக்கிறேன்.

இதனால் அவரை ஆத்திரமடையவும் செய்திருக்கிறேன். பகவத் கீதை கூறுவதுபோல ஒரு மனிதன் ஆத்திரமடையும்போது அவருடைய தராதர உணர்ச்சி பாதிக்கப்பட்டுவிடுகிறது.

பிற்போக்காளர்கள், பணமூட்டைகள், பெரிய பத்திரிகைகள், ஹிந்து- முஸ்லிம் வகுப்புவாதிகள் எல்லோரும் ஸ்ரீ கிருபளானியை ஆதரிக்கிறார்கள் என்று ஸ்ரீ நேரு கூறுகிறார்.

டலதரப்பட்ட மக்களும் ஏன் என்னை ஆதரிக்கிறார்கள். ஸ்ரீ மேனன் கம்யூனிஸ்ட் அனுதாபமுள்ளவர் என்றுநினைப்பதால் என்னை ஆதரிக்கிறார்கள். வடக்கு பம்பாய் தொகுதியிலுள்ள வோட்டர்கள் எல்லாம் முதலாளிகளோ, பெரிய பத்திரிகை நடத்துபவர்களோ அல்ல. அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுமல்ல. அவர்களெல்லாம் சாதாரணமான பிரஜைகள் இவர்களில் மிகப் பெரும்பாலோருக்கு வகுப்பு வாதிகளுடனோ முதலாளிகளுடனோ ஒரு சம்பந்தமுமில்லை.

## யூதாண்ட் முயற்சி

நியூயோர்க், பெப். 25

காங்கோ பிரதமர் அடூலாவையும், கடாங்கா அதிபர் ஷோம்பேயையும் சந்திக்கச் செய்ய ஐ. நா. காரியதரிசி திரு. யூதாண்ட் முயற்சி எடுத்து வருகிறார்.

## சாரணர் பொன் விழா

கொழும்பு, ஞாயிறு

நாளை குதிரைப்பந்தய மைதானத்தில் சாரணர் பொன் விழாவை பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயகா ஆரம்பித்து வைப்பார்.

---

புதுடில்லி, பெப். 25

கோவாவில் காவலில் வைக்கப்பட்டிருந்த 3 போர்த்துக்கேய சிவிலியன்கள் இன்று காலை லிஸ்பனுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# 7 வருடங்களுக்குப் பின் கோர்ட்டில் சரணடைந்தார்

## குற்றவாளிக்கு ரூ. 25 அபராதம்

மாவிட்டபுரம், ஞாயிறு

கொக்குவிலைச் சேர்ந்த வீரகத்தி செல்வராஜா என்பவர் மீது காங்கேசன் துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு ஒன்று சம்பந்தமாகச் செல்வராஜா ஏழு வருடங்களின்பின் சென்றவெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிபதி முன்னிலையில் சரணடைந்தார்.

செல்வராஜா தனக்குச் சொந்தமான சி ஈ 8888 என்னும் இலக்கம் பொறித்த வானை இன்ஷூரன்ஸ் பத்திரமின்றி ஓட்டிச் சென்றதாக, காங்கேசன் துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் 1955-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. செல்வராஜா குறித்த தவணையில் கோர்ட்டில் ஆஜராகாதபடியால் அவரைக் கைது செய்ய நீதிபதி வாரண்ட் பிறப்பித்தார். இவரைக் கைது செய்ய பொலிசார் முயன்றும் முயற்சியில் தோல்வி கண்டார்கள்.

சென்ற வெள்ளிக்கிழமை செல்வராஜா கோர்ட்டில் ஆஜராகியபோது நீதிபதி ஏன் தவணையின்போது வரவில்லையெனக் கேட்டதற்கு, செல்வராஜா தனக்கு இதுவரை காலமும், மல்லாகம் கோர்ட்டில் தன்மேல் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்பட்டிருப்பதோ அல்லது தன்னைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருப்பதோ தெரியாதென்றும், இப்போதுதான் தெரியவந்ததாகவும் கூறினர். தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு குற்றவாளியெனக் கூறவே நீதிபதி அவருக்கு 25 ரூபா அபராதம் விதித்தார்.

---

## தர்மபுரியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### மத்திய பிரதேசம்

மத்தியபிரதேசத்தில் அறிவிக்கப்பட்ட ஸ்தானங்களின் விபரம் வருமாறு: காங்கிரஸ் 15, சுதந்திரா 2, சோஷலிஸ்ட் 1, சுயேச்சை 1, ஜனசங் 1, ஹிந்து மகாசபா 1, இதர கட்சிகள் 3.

### மேற்கு வங்காளம்

காங்கிரஸ் 7, கம்யூனிஸ்ட் 1, சுயேச்சை 3.

### மைசூர்

காங்கிரஸ் 3, சுயேச்சை 1.

### தமிழ்நாடு

காங்கிரஸ் 1, சுயேச்சை 1.

### ஆந்திரா

காங்கிரஸ் 1, சுயேச்சை 1.

ஆசிரியருக்குக் கடிதம்

## கோவில்களில் உயிர்ப் பலி

ஐயா,

சைவக் கோயில்களில் ஆடு, கோழிகளைப் பலியிட்டு வருகிறார்கள். பிள்ளையைப்போல வளர்த்த ஆடுகளைப் பலியிடும் இக்கொடுஞ்செயல் நரகத் துன்பத்தைத் தரும். சைவத்தின் அடிப்படையான கொள்கை கொல்லாமையும் கொன்ற உயிரினது ஊனை உண்ணாமையுமாகும். இந்தக் கொள்கை சைவமக்களிடம் வேரூன்ற வேண்டும். சைவக்கோயில்களில் இக்கொடிய செயலை அறவே நீக்க வேண்டும்.

போயிட்டி க. சிவலிங்கம்

---

## பொலிஸ் அதிபர் அலுவலகம் இடமாற்றம்

காங்கேசன் துறை, ஞாயிறு

காங்கேசன் துறை பொலிஸ அதிபர் அலுவலகம் கீரிமலை வீதியிலிருந்து அங்குள்ள யாழ்ப்பாண வீதிக்கு மாற்றப்பட இருக்கிறது. இப்புதிய அலுவலகம் நடேஸ்வரக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு எதிரேயுள்ள டாக்டர் நிச்சிங்கத்தின் வீட்டிற்கு 1-3-62 முதல் மாற்றப்படுமெனத் தெரிகிறது. தற்போதைய அலுவலகம் பொலிஸ் விடுதியாக மாற்றப்படும்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன் துறை, சுன்னாகம், சங்கானை ஆகிய பகுதிகள் காங்கேசன் துறை பொலிஸ் அதிபரின் நிர்வாகத்தின் கீழ் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

---

## சிநேகபூர்வ கைப்பந்தாட்டம்

வேலணை, ஞாயிறு

வேலணை அரசினர் மத்திய கல்லூரி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமிடையில் நடைபெற்ற ஓர் சிநேகபூர்வமான கைப்பந்தாட்டப்போட்டியில் மாணவர் கோஷ்டி 2-1 ஆட்டங்களால் வெற்றிபெற்றது. இப்போட்டி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

# தந்தை, தாய், புதல்வி சுட்டுக்கொலை

## மகோணவில் சம்பவம்

கொழும்பு, ஞாயிறு

மகோணவில் ஒரு தந்தையும், தாயும், 17 வயதான அவர்களது புதல்வியும் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. ரப்பர் தோட்டம் ஒன்றில் வேலை செய்துவிட்டுத் திரும்பிய தந்தையும், மகளும், முதலில் சுடப்பட்டதாயும், இதைக் கண்டு அங்கு ஓடிச் சென்ற தாயாரும் சுடப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஸ்தலத்தில் துப்பாக்கி ஒன்றைப் பொலிசார் கண்டெடுத்தனர்.

இதுசம்பந்தமாக ஒரு நபரையும், 2 பெண்களையும் பொலிசார் கைது செய்தனர். பொலிஸ் தலைமைக் காரியாலயம் துப்புத் துலக்கும் பொருட்டு பொலிஸ் நாய்களை அனுப்பியுள்ளது.

## கொலை ஸ்தலத்துக்கு சந்தேக நபரை இட்டுச் சென்றனர்

கொழும்பு, ஞாயிறு

கடுகண்ணாவை - கண்டி ரோட்டில் கொலை செய்யப்பட்ட இளம் பெண் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட டபிள்யு. எச். டெனிசன் என்ற நபரை, கொலை செய்யப்பட்ட இடத்திற்கு பொரளை பொலிசார் இன்று காலை அழைத்துச் சென்றனர். இறந்த பெண்ணின் சடலத்தை இன்று தான் அவளது தந்தையும், தாயும் அடையாளம் கண்டு பிடித்தனர். சந்தேக நபர் நாளை கேகாலை மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்யப்படுவார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

பிளாஸா (வெள்ளவத்தை) — கெபிட்டல் (கொழும்பு)

வெம்பிளி (கண்டி) — விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) — சகாரா (சிலாபம்)

மனோகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசனா நடித்த




2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 தியேட்டர்களில்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார் நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

சிவாஜிகணேசன் பத்மினி நடித்த

தூக்கு தூக்கி


...டு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது ...கத்தில் 1962-ம் ஆண்டு பெப்ரவரி மாத 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.